
63

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய

# வரலாற்றுப் பெட்டகம்



வெளியீடு

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய

**தர்மகர்த்தா சபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதடியான் துணை

# மானிப்பாய்
# மருதடி விநாயகர் ஆலயம்
# ஆவர்த்தனப் பிரதிஷ்டா
# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்



**காலம்: 02.02.2015 திங்கட்கிழமை**

**காலை 9.45 - 10.45 மணிவரை**

**தை மாத புனர்பூச நட்சத்திரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிப்பாய்
மருதடி விநாயகர் ஆலய
ஆவர்த்தனப் பிரதிஷ்டா
மஹா கும்பாபிஷேகப் பெருஞ் சாந்தி விழாவின்
பிரதிஷ்டா பிரதமகுரு



அடியவர்களின் பெருமதிப்பிற்கும் வணக்கத்திற்குமுரிய
அராலியூர்
சிவஸ்ரீ சிவஸ்வாமிக் குருக்கள் பரமேஸ்வர
**ஜெயகுமாரக்குருக்கள்**
(பிரதம குரு, மருதடி விநாயகர் ஆலயம், மானிப்பாய்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியவர் உள்ளங்களில் அகமகிழ்ந்து குடியிருந்து

அருளை வாரிவாரி வழங்கும் வள்ளல்

## மானிப்பாய் மருதடி விநாயகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

நூல் :- மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வரலாற்றுப் பெட்டகம்

முதற்பதிப்பு :- 2015.02.02

பதிப்புரிமை :- மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையினர்

மலர் தொகுப்பு :- சுப்பிரமணியம் புஸ்பராங்கன் (கண்ணன்)
சி. கஜமாமுகன் (கஜா)

பக்கங்கள் :- 33 + 64

தாள் :- 70gsm


பிரதிகள் :- 2000

அச்சமைப்பு :- அன்ரா பிறிண்டேர்ஸ்,
356A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 7279




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய
## மஹா கும்பாபிஷேகத்திற்கு ஆசிவழங்கும்
## பெரும் குரவர்கள்




சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்
(சிவன் தேவஸ்தானம், கீரிமலை)



சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்
(காயத்திரிபீடம், இணுவில்)

## முகூர்த்த நிர்ணயமும் ஆலோசனைகளும்



சிவஸ்ரீ தியாக கெங்காதரக்குருக்கள்
(பிள்ளையார் கோவில், ஈவினை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இம்மஹா கும்பாபிஷேகத்திற்கு விண்ணிலிருந்து ஆசி வழங்கும் மூத்த சிவாச்சார்யார்கள்



சிவஸ்ரீ நவாலியூர்
சுவாமி விஸ்வநாதக்குருக்கள்



நியாய சிரோன்மணி
கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்
நல்லூர்



அரியாலையூர்
சிவஸ்ரீ இ.சுப்பிரமணியக்குருக்கள்



வடகோவை
சிவஸ்ரீ வை.மு. பரமசாமிக்குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இக்கோயிலை பொதுச் சொத்தாக்குவதற்கு முன்னின்று உழைத்த பெருந்தகைகள்



அமரர் சி. சுப்பிரமணியம் (ஓறேற்றர் மாஸ்ரர்)
கட்டுடை, மானிப்பாய்



அமரர் மு. இராமேஸ்வரம்
மானிப்பாய்



அமரர் மு. வைரமுத்து
மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகோற்சவ நாட்கள் இருபத்தைந்து

எமது ஆலயத்தில் மகா கும்பாபிஷேகத்தினை அடுத்து நடைபெறும் மகோற்சவமானது இதுவரை காலமும் நடைபெற்ற 18 நாள்களை விடுத்து இருபத்தைந்து நாட்கள் நடைபெறும் என்பதனை மிக்கமகிழ்ச்சியோடு அடியவர்களுக்கு அறியத்தரு கின்றோம். இதுவரை காலமும் மார்ச் மாதம் 29ஆம் திகதி நடைபெற்ற கொடியேற்ற வைபவமானது மார்ச் மாதம் 22ஆம் திகதி நடைபெற்று வழமைபோன்று தமிழ் சிங்கள புதுவருடப் பிறப்பன்று இரதோற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடை பெறும் என்பதை அடியவர்களாகிய உங்களுக்கு உள மகிழ்ச்சி யோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**ஆலய தர்மகர்த்தா சபையினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய்
# மருதடி விநாயகர் ஆலயம்
## ஆவர்த்தனப் பிரதிஷ்டா நவகுண்டபக்ஷ
## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

“வெண்ணிலா என்னவெண்மை மேனியிலே
வெண்ணுடை தரித்த பேரழகும்
விண்ணிலோ மண்ணிலோ எனப் பிரித்த றியா
விசுவா பேருருவதன் நிறைவும்
கண்ணிலே நிறைந்த களிற்று மாமுகமும்
கரங்களோர் நான்கும் எண்ணுவார் தமக்கு
மானியூர் மருதா எந்தை தாளென்றும் மெய்த்துணையே”

**என்றும் மருதடியான் மீது பெரும் பக்திகொண்ட அடியவர்களே!**

நாற்புறமும் கடல்சூழ்ந்து அலைகள் ஆர்ப்பரிக்கும் இலங்காபுரியின் மணிமுடியாக விளங்குவது யாழ்ப்பாணம். இம்மகத் தேசத்தின் எழில் கொஞ்சும் நகரமாக விளங்குவது மானியம்பதி. இப்பதியில் அர்ச்சுன தரு எனும் மருத மரங்கள் சூழ்ந்த இயற்கையாகவே வயலும் வயல்சார்ந்த மருதநிலத்தில் தனது திவ்ய பதியாக்கிக் கொண்டவர் மருதடி விநாயகர். இப்புண்ணிய பூமியிலே பிறந்த மானிடர்கள் இறைசிந்தனையோடு வாழவேண்டும் சைவமும் தமிழும் செழிக்க வேதநெறி தழைத்தோங்க எல்லா உயிரினங்களும் மகிழ்வோடு வாழவேண்டும் என்ற நன்நோக்கோடு இற்றைக்கு பல்லாண்டுகளுக்குமுன் இம் மருதமரச் சோலையிலே இறைசக்தி கைவரப் பெற்ற தவசிரேஷ்டர்களினால் ஸ்தாபிக்கப்பெற்று பூஜித்து அதன்மூலம் பல்லாயிரக்கணக்கான அடியவர் களுக்கு அருள் சொரிந்து கொண்டிருப்பவர் மருதடி விநாயகர். மருதடி விநாயகர் ஆலயம் ஈழத்தின் முதன்மைக் கோயிலாக விளங்குகிறது. இவ்வாலயத்தில் உறையும் விநாயகர் பல்லாண்டுகளுக்கு முற்பட்ட தனது ஆலயத்தை கருங்கற் கோயிலாக்க வேண்டும் என்ற எண்ணத்தை அடியவர்களுக்கு வெளிப்படுத்தி உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளில் பரந்து வாழும் மருதடி விநாயக ருடைய மீளா அடியவர்கள் உவந்தளித்த பெரும் நிதிகொண்டு புனர்நிர்மாணம் செய்யப்பெற்று மாமல்லபுரத்து சிற்பவல்லுனர்களினால் சிற்பக்கூடமாக


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கலைக்கோயிலாக தங்கவர்ணம் தீட்டப்பெற்று பெரும் பொற்கோயிலாக வானுயர்ந்து நிற்கும் ராஜகோபுரங்கள் சூழ்ந்த இக்கோயிலின் திருப்பணிகள் நிறைவு செய்து இவ்வாலயத்தில் வீற்றிருக்கும் மருதடி விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார தேவதைகளுக்கும் ராஜகோபுரங்களுக்கும் மருதடியான் திருவுள்ளத்தின்படி நிகழும் மங்களகரமான "ஜய" வருடம் தை மாதம் 19ம் நாள் (02.02.2015) திங்கட்கிழமையும் ஹேமந்தருதுவும் உத்தராயண காலமும் குருவோரையும் சித்தயோகமும் வளர்பிறைச் சதுர்த்தசித் திதியும் புனர்பூச நட்சத்திரமும்கூடிய காலை 9.45 தொடக்கம் 10.45 மணிவரையிலான மீனலக்ன சுபவேளையில் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற மருதடியான் திருவருள் பாலித்துள்ளார். ஆகவே மருதடியானின் மீது அளப்பெரும் பக்தி கொண்ட மெய்யடியார்கள் அத்தினமும் அதற்கு முன் தினங்களும் மருதடியானின் தங்கக் கோயில் வலம்வந்து கிரியைகளில் பங்குபற்றி அதன் பலனாக கிடைத்தற்கரிய பெரும் பேறையும் மங்காத புகழையும் குன்றாத இளமையும் வற்றாத செல்வமும் நோயில்லாப் பெருவாழ்வும் இறைவன் மீது அசையாத பக்தியும் உற்றார் உறவினர் குடும்பத்தவரோடு என்றும் சந்தோஷத்தோடு வாழ எல்லாம்வல்ல கற்பகதருவாகிய கருங்கற் கோவில் கொண்ட மருதடியான் தாள்பணிந்து எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் நியமங்கள்

தை மாதம் 9ம் நாள் (23.01.2015) வெள்ளிக்கிழமை காலை 6.40 மணிக்கு மேல் சுக்கிரஹோனயில் கும்பாபிஷேக கிரியாரம்பம்.

காலை 6.00 மணிக்கு ஆச்சார்ய வர்ணம் ஆலயப் பிரதட்சணம் கோபூஜா, விநாயக வழிபாடு, அனுக்ஞை திரவ்ய சுத்தி, திரவ்ய விபாகம், கணபதி ஹோமம், உபசார ஹோமம், வசுதாராஹோமம் கீத, வாத்ய, நிருத்த உபசாரம் அபிஷேகம், தீபாராதனை, அருட்பிரசாதம் வழங்கல்.

மாலை 4.00 மணிக்கு யந்திர பூஜை பூர்த்தி

## இன்றைய கிரியைகளின் விளக்கம்

### ஆச்சார்ய வர்ணம்

இக்கும்பாபிஷேகத்தை தலைமையேற்று நடாத்தும் தலைமைக் குருவையும் ஏனைய சிவாச்சார்யர்கள், சாதாகாச்சார்யர்கள், போதகாசிரியர், உதவிக் குருமார்களையும் கும்பாபிஷேக பிரதம குருவாக விளங்கும் இவ்வாலய பிரதமகுருவின் இல்லத்தில் ஆதீன கர்த்தாக்கள் பக்தப் பெருமக்கள் எல்லோரும் சென்று அவர்களை வணங்கி இக்கும்பாபிஷேகப் பெருவிழாவை சிறப்பாக நடாத்துமாறு பிரார்த்தனை செய்து அவர்களை மங்களவாத்யம் சகிதம் ஆலயத்திற்கு அழைத்துவரல் ஆச்சார்ய வர்ணமாகும்.

### கோ பூஜை

கோமாதாவில் எல்லாத் தெய்வங்களும் நிறைந்திருப்பதால் கோமாதாவை வழிபட்டால் எல்லாத் தெய்வங்களையும் வழிபட்ட பலன் கிட்டும். ஆகவே மங்களகரமான கோமாதாவை அலங்காரம் செய்து பூஜித்து எல்லோருக்கும் நன்மை கிடைக்க பிரார்த்தனை செய்வோமாக.

### விநாயக வழிபாடு

எக்காரியத்தையும் தொடக்கமுன் விநாயகரை வழிபட்டு எக்காரியங் களையும் தொடங்குவது மரபு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வண்ணமே இம்மருதடியானுடைய கும்பாபிஷேகம் எந்தவித விக்கினமும் இல்லாமல் சிறப்பாக நடைபெற விநாயகரைப் பிரார்த்தனை செய்து கிரியைகளை ஆரம்பிப்போமாக.

**அனுக்ஞை**

முதலில் வந்திருக்கும் சிவாச்சார்யப் பெருமக்களிடம் அவர்களை வணங்கி அவர்களுக்கு தட்சணை தாம்பூலம் கொடுத்து இக்கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடாத்தப் போகிறேன். தேவரீர் அனுமதி தாருங்கள் என்று பிரார்த்தனை செய்தல் அனுக்ஞையாகும்.

**தேவ அனுக்ஞை**

சிவாச்சார்யர்கள் பெரியவர்களிடத்தில் அனுமதி பெற்று அதன்பின் பாலாலயத்தில் இருக்கும் மருதடிப் பிள்ளையாரிடம் சென்று இக்கும்பாபிஷேகத்தை செய்வதற்கு தேவரீர் அனுமதி தரவேண்டும் என்று பிரார்த்தனை செய்வது தேவ அனுக்ஞையாகும்.

**திரவிய சுத்தி**

இக்கும்பாபிஷேகத்தின் பொருட்டு பல பாகங்களிலும் இருந்து சேகரிக்கப்பட்ட திரவியங்களை மருதடிப் பிள்ளையாரின் கும்பாபிஷேகத்திற்கான திரவியங்களாக பூஜைசெய்து அத்திரவியங்களை அவற்றிற்குரிய திரவியசாலையில் வைத்து பூஜை செய்வது திரவிய சுத்தியாகும்.

**திரவிய விபாகம்**

இக்கும்பாபிஷேகத்தின் பொருட்டு சேகரிக்கப்பட்ட நிதியினை மருதடி விநாயகருடைய நிதியாக பாவனை செய்து பூஜித்து அந்நிதியினை பதினொரு பாகங்களாக பிரித்து எவ்வண்ணமாக இந்நிதி இக்கும்பாபிஷேகத்திற்கு பயன்படுகிறது என்பதை தர்மகர்த்தாக்களுக்கு விளக்கி அவர்களிடம் அந்நிதிகளைக் கையளித்தல் திரவிய விபாகமாகும்.

**கணபதி ஹோமம்**

இக்கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற விநாயகப் பெருமான் திருவருள் வேண்டி கணபதி ஹோமம் செய்வர். முறைப்படி கும்பங்கள் ஸ்தாபித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஜை செய்து குண்டத்தில் அக்கினி வளர்த்து விநாயகப் பெருமானை எழுந் தருளப் பண்ணி பெருமானுக்குப் பிடித்தமான திரவ்யங்களை ஹோமம் செய்து உபசாரங்கள் செய்து உலக நன்மைக்காக நெய் சொரிகின்ற வசுதாரா ஹோமம் செய்து அபிஷேகம் தீபாராதனை வேதம், ஸோத்திரம், தாளம், ராகம், நாட்டியம் போன்றவற்றால் மகிழ்வித்தல் கணபதி ஹோமமாகும்.

(தை மாதம் 10ம் நாள் (24.01.2015) சனிக்கிழமை காலை 8 மணிக்கு வேதபாராயணம், திருமுறை பாராயணம், கணபதி ஆராதனை, நூதன மூர்த்திகள், பூர்வாங்கக் கிரியைகள், நயனோன் மீலனம், தான்யாதி வாசம், ஜலாதி வாசம் சயனாரோகணம், கோபூஜை)

மாலை 4.00 மணிக்கு திருமறை, திருமுறை பாராயணம், ஐங்கரன் ஆராதனா, கிராம சாந்தி, பிரவேச பலி.

**இன்றைய கிரியைகளின் விளக்கம்**

**காலை** வழமைபோல் விநாயகப் பெருமானை வழிபாடு செய்து புதிதாக ஸ்தாபிக்கப்படுகின்ற விக்கிரகங்களுக்கு விதிமுறைகள் உண்டு. முதலில் நயனோன் மினலம் என்று விக்கிரகங்களின் கண்களைத் திறத்தல், தான்னியாதி வாசம் என்பது நெல்லால் விக்கிரகங்களை மூடுதல்: ஜலாதி வாசம் என்பது நீரில் விக்கிரகங்களை வைத்தல், சயனா ரோகனம் என்பது விக்கிரகங்களை நித்திரை செய்யும் பாவனையாக சரித்துவைத்தல் இதன் பிற்பாடு கோமாதாவுக்கு வழிபாடு செய்தல்.

**மாலை கிராமசாந்தி**

விநாயகப் பெருமானை துதிசெய்து கிராமசாந்தி எனும் கிரியை நடாத்தப் படும். இக்கிராமசாந்தியாவது உலகத்தின் நன்மைக்காகவும் ஆலயத்தைச் சூழவுள்ள துஷ்டசக்திகளை இக்கும்பாபிஷேகத்தின் பொருட்டு அகற்றிவைரவப் பெருமானை காவலாக இருக்கும்படி பூஜை செய்வது இக்கிரியை உணர்த்தும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்சாயம் எனும் அறுவகைப் பகைகளே அசுரர்களாக உருவகப்படுத்தி அவற்றினை அழித்து நல்லதை மனதிலே நிலைநிறுத்தச் செய்வது இதன் உட்கருத்தாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரவேச பலி

இக்கிரியையும் கிராம சாந்தி போன்றதே. ஆலயத்தின் கோபுரவாசல் தொடக்கம் சுற்றியுள்ள எட்டுத் திக்குகளிலும் நிற்கின்ற துர்த்தேவதைகளை அகற்றி அவர்களை திருப்தி செய்யுமுகமாக அவர்களுடைய இடங்களில் மெழுகி கோலம் வரைந்து பலி உருண்டை, பூ வகைகள், பந்தம், இளநீர் போன்றவைகளால் திருப்தி செய்து அவர்களை தூர இடங்களுக்கு செல்லுமாறு பணித்து இவ்விழாக்கள் முடியும்வரை இந்திரன் முதலான அஷ்டதிக்கு பாலர் களை பூஜைசெய்து வழிபடுவது இக்கிரியைகளின் உட்கருத்தாகும்.

தை மாதம் 11ம் நாள் (25.01.2015) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு வேதபாராயணம், திருமுறை பாராயணம் விநாயக வழிபாடு, கோபூஜை, ரக்சோக்ன ஹோமம், கிரியா விளக்கம்.

### இக்கிரியைகளின் விளக்கம்

முதலில் விநாயகப் பெருமானை மெய்யன்போடு வழிபாடுசெய்து கோமாதாவை வழிபாடுசெய்து ரக்சோக்ன ஹோமத்தை ஆரம்பிப்பர்.

### இக்ஹோமமாவது

முதலில் நடந்தவை ஆலயத்தின் வெளிவீதியை புனிதப்படுத்தும் கிரியைகள் ஆகும் அடுத்து ஆலயத்தின் உள்வீதியை புனிதாமாக்கும் கிரியை கள் நடைபெறும்.

அவ்வகையில் ரக்சோக்கன தேவர் எனப்படுபவர் இராட்சதர்களை அளிப்பவர் எனப் பொருள்படும். இத்தேவர்களுக்கு முறைப்படி பூஜை செய்து ஹோமங்கள் செய்து விசேடமாக பருத்தி, மிளகு, எள், வெண்கடுகு போன்ற வற்றால் ஹோமம் செய்து அவரை திருப்தி செய்வதன்மூலம் அவர் துஷ்ட தேவர்களை அழித்து ஆலயத்தை புனிதம் செய்கிறார் என்பது இக்கிரியைகளின் பொருளாகும்.

தை மாதம் 12ஆம் நாள் (26.01.2015) திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு திருமறை, திருமுறை பாராயணம், ஐங்கரன் ஆராதனா, கோபூஜை, திசா ஹோமம், கிரியா விளக்கம்

### இக்கிரியைகளின் விளக்கம்

வழமைபோல் ஐங்கரனை துதிசெய்து கோமாதாவையும் வழிபாடு செய்து அதன்பின் திசா ஹோமம் எனும் கிரியைகளைச் செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் நான்கு திக்குகளிலும் முறைப்படி கும்பம் தாபித்து அவற்றில் சிவாஸ்திரர், அகோராஸ்திரர், பாசுபதாஸ்திரர், பிரத்தியங்காஸ்திரர் முதலிய தேவர்களை ஆவாகனம் செய்து முறைப்படி ஹோமம் செய்துபின் அக்கும்பத்தின் நீரை ஆலயத்தைச் சுற்றி ஊற்றி தீயவைகளை விலத்தி இத்தேவர்களை காவலாக இருக்கும்படி வேண்டுதல் செய்வது திசாஹோமமாகும்.

தை மாதம் 13ம் நாள் (27.01.2015) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு வேத, தேவார பாராயணம், ஏகதந்தர் வழிபாடு, கோபூஜை சாந்தி ஹோமம், சம்ஹிதா ஹோமம், கிரியா விளக்கம்.

**இக்கிரியையின் விளக்கம்**

வழமைபோல் முழுமுதற் கடவுளாகிய ஐங்கரனை ஆராதித்து தெய்வப் பசுவாம் கோமாதாவையும் நமஸ்காரம் செய்து சாந்தி ஹோமம், சம்ஹிதா ஹோமம் முதலியவற்றை ஆரம்பிப்பர். இக்ஹோமமாவது பாசுபதாஸ்திரர் எனும் தேவருக்கு முறைப்படி கும்பங்கள் வைத்து பூஜித்து பலாசு, அரசு, ஆல், வில்வம், கருங்காலி, அத்தி, நாயுருவி, வன்னி போன்ற சமித்துக்களினால் ஹோமம் செய்து நெய், பால், எள், அறுகு இலைகள் கலந்து ஹோமம் செய்து விக்கிரக சுத்தியின் பொருட்டு மூலவருக்கு அபிஷேகம் செய்வர்.

சம்ஹிதா ஹோமமாவது முறைப்படி கும்பம் ஸ்தாபித்து சம்ஹிதா மந்திர தேவதைகளை ஆவாகனம் செய்து ஹோமம் செய்து பின் இக்கும்பத்தை மூலவருக்கு அபிஷேகம் செய்தலாகும்.

பாலாலயத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகப்பெருமானினதும் ஏனைய சுவாமிகளின் விக்கிரகங்களின் மீதுள்ள தோஷங்கள் அகல்வதற்காக இக் ஹோமங்களின் முடிவில் அபிஷேகம் செய்யப்படுகிறது.

தை மாதம் 14ம் நாள் (28.01.2015) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு திருமறை, திருமுறை பாராயணம், கஜகர்ணர் வழிபாடு, மூர்த்தி ஹோமம், கோ பூஜை, கோவாசம்.

**இக்கிரியைகளின் விளக்கம்**

முதலில் விநாயகப் பெருமானை பிரார்த்தனை செய்து மூர்த்தி ஹோமத்தை ஆரம்பிப்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தி ஹோமமாவது முறைப்படி கும்பங்கள் தாபித்து அதில் விநாயகப்பெருமானை ஆவாகனம் செய்து ஹோமங்கள் செய்து பின் மூலவருக்கு அபிஷேகம் செய்தலாகும்.

பின் கோமாதாவை அலங்காரம் செய்து பூஜித்து இத்தனை கிரியை களினாலும் சுத்தம் செய்து புனிதமாக்கப்பட்ட ஆலயத்தில் மூலஸ்தானத்தில் சகல தெய்வாம்சமும் நிறைந்த தெய்வப் பசுவாம் காமதேனுவுக்கு ஒப்பான அந்த கோமாதாவை மூலஸ்தானத்தில் அழைத்துச் சென்று சில நாழிகைகள் வசிக்கச் செய்வது கோவாசமாகும்.

இத்தனை கிரியைகளும் செய்து புனிதமாக்கிய மந்திரரூபம் நிறைந்த இவ்வாலயத்தில் இறைவன் எழுந்தருளப் போகிறான் என்பதை மனதில் நிறைவாகச் சிந்திப்போமாக.

தை மாதம் 15ம் நாள் (29.01.2015) வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு திருமறை, திருமுறை பாராயணம், விநாயக வழிபாடு, நவக்கிரக ஹோமம், வாஸ்து சாந்தி

**இக்கிரியைகளின் விளக்கம்**

முதலில் விநாயகப் பெருமானை வழிபாடு செய்து நவக்கிரக ஹோமம் செய்வர். இவ்வாலயத்தினுடைய, எஜமானுடைய, குருவினுடைய, மக்களுடைய கும்பாபிஷேக நாள் கிரியைகளுடைய தோஷங்கள் நீங்குவதற்காக நவக்கிரக தேவர்களை நோக்கி செய்யப்படும் ஹோமமாகும்.

நவக்கிரக தேவர்களுக்கு முறைப்படி கும்பம் வைத்து அந்தந்த தேவர் களுக்குரிய தானியங்கள், அவற்றிற்குரிய நிறப்பட்டு, மாலை முதலியவற்றால் அலங்காரம் செய்து ஹோமகுண்டத்தில் அந்தந்த நிறங்களையுடைய வஸ்திரங் களை அணிந்த ஒன்பது சிவாச்சாரியர்களினால் ஒவ்வொரு நவக்கிரக தேவதை களுக்கும் பிடித்தமான சமித்து, தானியம், சாதவகை போன்றவற்றால் ஹோமம் செய்து அந்தந்த தேவர்களுடைய சிறப்புக்களை தெரியப்படுத்தி ராகம், தேவாரம் போன்றவற்றால் திருப்தி செய்து பூர்ணாகுதி கொடுத்து அடியவர் களெல்லாம் கோளாறு பதிகத்தை ஓதி நவக்கிரக தேவர்களின் ஆசியால் எல்லா தோஷங்களும் நீங்கி மருதடியானுடைய மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற பிரார்த்தனை செய்வீர்களாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாஸ்து சாந்தியாவது

இத்தனை கிரியைகளாலும் சுத்திகரிக்கப்பட்ட இவ்வாலயத்தை மேலும் சுத்தமாக்கும் பொருட்டும் புதிதாக அமைக்கப்பெற்ற யாகசாலைகளை சுத்திகரிக்கும் பொருட்டு வாஸ்து புருஷன் என்னும் தேவரை முறைப்படி பூஜை செய்து ஹோமம் செய்து பூர்ணாகுதிகொடுத்து அக்ஹோமத்தீயில் வாஸ்துபுருசனை எரித்து அவரை ஆலயத்தின் எல்லா இடங்களுக்கும் இழுத்துச் சென்று குளக்கரையில் போட்டு விடுவது மரபு. இவ்வாஸ்து புருஷனானவன் தானும் எரிந்து இவ்விடத்திலுள்ள தீயசக்திகளையும் எரித்து சாம்பலாக்கு கிறான் என்பது இதன் பொருள்.

தை மாதம் 16ம் நாள் (30.01.2015) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு வேத, தேவார பாராயணம், ஆனைமுகன் ஆராதனை, சூர்யாக்னி சங்கிரகணம், கங்காபூஜை.

## இக்கிரியைகளின் விளக்கம்

முதலில் ஐங்கரப்பெருமானை ஆராதனைசெய்து சூர்யாக்கினி சங்கிரகணம் எனும் கிரியைகளை ஆரம்பிப்பர். இன்று மாலை தொடங்கப் போகும் யாகாக்னியின் பொருட்டு அக்கினியை வரவழைத்தல் இக்கிரியையின் பொருளாகும்.

பரந்து விரிந்து ஒளி பரப்புகின்ற சூரியபகவானை முறைப்படி கும்பம் வைத்து பூஜை செய்து வானிலே பிரகாசிக்கின்ற சூரியபகவானுடைய வெப்பக் கதிர்களை ஓரிடத்தில் குவியச்செய்து இதற்காக தயாரிக்கப்பட்ட மண்சட்டியில் சூர்யாக்கினியை பிரகாசிக்கச் செய்வது இக்கிரியையின் கருத்தாகும்.

## கங்கா பூஜை

மாலை நடைபெறுகின்ற கடஸ்தாபனம் எனும் கிரியைகளுக்கு தேவையான தீர்த்தத்தை ஆலயத்தில் அமைந்திருக்கும் திருமஞ்சனக் கிணற்றில் கங்காதேவியை பூஜைசெய்து குடத்தில் அந்நீரை நிரப்பி கும்பமாக அலங்காரம் செய்து பூஜித்து மாலை நடைபெறும் கடஸ்தாபனத்தில் இக்கங்கா தீர்த்தத்தைச் சேர்த்துக் கொள்வர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தை மாதம் 16ம் நாள் (30.01.2015) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வேதபாராயணம், தேவாரப் பாராயணம், ஆனைமுகன் ஆராதனை, மிருத் சங்கிரகணம், அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம், நித்தியத் துவஜாரோகணம், கோபூஜா, பிரசன்னாபிஷேகம், பிரசன்ன பூஜை, கடஸ்தாபனம் கலாகர்சணம் பிரதான கும்பங்கள் யாகசாலா பிரவேசம், தூபிஸ்தாபனம், மங்கள மஹாலக்ஷி ரூப தீபஸ்தாபனம், சகல யாகபூஜா, அக்கினி உற்சவம், பிரதான யாகசாலா அக்கினி உத்வலம், நவாக்கினி விபஜனம், ஹோமங்கள், சகல யாக சாலாயாம் அஸ்டோத்தரநாம ஹோமம், பூர்ணாகுதி, பிரதட்சண நமஸ்காரம், தீபாராதனை, திருமறை, திருமுறை பாராயணம், சர்வாஞ்சலி திவ்யபிரசாதம் வழங்கல்.

**பின்னிரவு**

யந்திரஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம்

**இன்றைய கிரியைகளின் விளக்கம்**

விநாயகப்பெருமானை வழிபட்டு கிரியைகளை ஆரம்பிப்பர். முதலில் மிருத்சங்கிரணமாவது, மிருத் என்றால் மண், சங்கிரகணம் என்றால் எடுத்தல். அங்குரார்ப்பணம் என்கின்ற முளைப்பாலிகை போடுவதற்கு தேவையான மண்ணை புனிதமான இடத்தில் பூமிதேவியைப் பூஜை செய்து அவ்விடத்தில் மண்ணை எடுப்பது மிருத்சங்கிரகணம் எனப்படும்.

**அங்குரார்ப்பணமாவது**

எடுக்கப்பட்ட மண்ணை யாகசாலையின் வடமேற்கு மூலையில் இருக்கும் மேடையில் அம்மண்ணை மண்சட்டிகளில் இட்டு நடுவில் சந்திரதேவருக்கு கும்பம் ஸ்தாபித்து அவரைச் சுற்றி முளைப்பாலிகையிட்டு பூஜை செய்வர். பயிர்களுக்கு அதிபதி சந்திரன் ஆகையால் சந்திரனைப் பூஜித்து இப்பாலிகை களை இடுவர்.

**இரட்சாபந்தனமாவது**

இப்பாலிகைகளையிட்டு பூஜை செய்து இங்கே ரட்சாபந்தனம் எனும் மஞ்சள் நூலை எட்டு நாகதேவதைகளாக பூஜித்து இக்கும்பாபிஷேகத்தில் பங்குபற்றும் சிவாச்சார்யர்களும் எஜமானும் ஷேமத்திற்காக தமது வலதுகை மணிக்கட்டில் மந்திர பூர்வமாக கட்டப்படுவது. இந்நூல் கும்பாபிஷேகம் முடிவுற்ற பின் மந்திர பூர்வமாக கழற்றப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நித்தியத் துவஜாரோகணமாவது**

இக்கும்பாபிஷேக மங்களகர்மாவின்போது எல்லா நன்மைகளும் பெருகவும் இவ்விடத்தில் கும்பாபிஷேக நிகழ்வுகள் நடைபெறுவதை லோகத் திற்கு தெரியப்படுத்துமுகமாக தர்மரூபமாகிய எலிக்கொடியை மந்திரபூர்வமாக ஏற்றிவைத்து தினமும் எல்லா சிவாச்சார்யர்களும் பூஜை செய்வர்.

பிரசன்னாபிஷேகம். பிரசன்ன பூஜை இவைகள் இறைவனுடைய சாந்தித் தியத்திற்காக செய்யப்படும் கிரியைகளாகும்.

**கடஸ்தாபனம்**

கும்பத்திலே இறைவனை எழுந்தருள்வதற்கு முன்னதாக செய்யப்படும் கிரியைகளாகும். கும்பமானது உடலாகவும் தேங்காய் தலையும் திருமுடியு மாகவும் மாவிலை சடையாகவும் சுற்றப்பட்டிருக்கும் நூல் நாடி நரம்புகளாகவும் பட்டு தோலாகவும் நீர் இரத்தமாகவும் தர்ப்பை குடுமியாகவும் கும்பத்திலே இடப்படுகின்ற திரவ்யங்கள் வீர்யமாகவும் உச்சரிக்கப்படுகின்ற மந்திரங்கள் உயிராகவும் நவதானியங்கள் ஆசனமாகவும் நெல் அரிசி போன்றவை ஜீவராசிகளாகவும் வாழையிலை பூமியாகவும் விளங்குகின்றன. இப்படியாக உருவாக்கப்பட்ட கும்பத்தில் மூலாலயத்தில் இருக்கின்ற இறைவனை மந்திரரூபமாக எழுந்தருளச் செய்வது கலாகர்சனம் எனும் கிரியைகளாகும்.

இப்படியாக எழுந்தருளிய இறைவனை மேலும் சான்னித்தியம் பெருகு முகமாக அமைக்கப்பெற்ற யாகசாலைகளிலே ஸ்தாபித்து பூஜைகள் செய்யப் படும். யாகங்களிலே குண்டங்கள் அமைத்து அதில் இறைவனை எழுந்தருளச் செய்து ஆகுதிகள் கொடுத்து மேன்மேலும் திருவருட் சக்தியைப் பெருகச் செய்வது யாக பூஜையாகும்.

**தூபிஸ்தாபனம்**

ஆலய நிர்மாணங்கள் முடிந்தபின் ஆலய விமானத்தின் கலசமாக அமைவது தூபிக்கலசமாகும். இக்கலசம் வைக்கும்போதுதான் ஆலயம் முழுமையடைகிறது. இதையே தூபிஸ்தாபனம் என்பர்.

**தீபஸ்தாபனம்**

பூர்த்தியாக்கப்பட்ட ஆலயத்தில் முதலில் கோவாசம் செய்தபின் மகாலட்சுமியின் திருவருள் கிடைப்பதற்காக குருபத்தினிகள் குத்துவிளக்கிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாலட்சுமியை ஆவாகனம் செய்து வலமாகவந்து ஒவ்வொரு ஆலயத்தி னுள்ளும் வைத்து இவ்வாலயத்தில் மகாலட்சுமியே நிரந்தரமாக வாசம் செய்வாயாக என்று பிரார்த்தனை செய்வர். இது தீபஸ்தாபனம் எனப்படும்.

**விம்பஸ்தாபனம் அஸ்டபந்தனம்**

மேற்படி நிகழ்வானது புனிதமான ஆலயத்தினுள் இறைவனுடைய திருவுருவங்களை குறிக்கப்பட்ட சுபவேளையில் ஸ்தாபித்தல் விம்பஸ்தாபனம் என்பர். அப்படி ஸ்தாபிக்கப்பட்ட விக்கிரகங்கள் அசையாமல் இருப்பதற்காக அமைக்கப்பெறுவது அஷ்டபந்தனம் எனப்படும். அஷ்டபந்தனம் என்பது, சுக்கான் கல், குங்கிலியம், கொம்பரக்கு, தேன்மெழுகு, நற்காலி, செம்பஞ்சு, எருமை வெண்ணெய், சாதிலிங்கம் என்பவை அஷ்டபந்தனத்துக்குரிய திரவியங் களாகும்.

**தைலாப்பியங்கம்**

இப்படியாக ஸ்தாபிக்கப்பட்ட திருவுருவத்திற்கு குளிர்மை உண்டாவதற் காக நல்லெண்ணை சாத்துவர். இது எண்ணைக்காப்பு எனப்படும்.

தை மாதம் 17ம் நாள் (31.01.2015) சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு வேதபாராயணம், தேவார பாராயணம், விநாயக ஆராதனா, விசேட சந்தி, பூத சுத்தி, யாகபூஜை, கோபூஜை, பாவனாபிஷேகம், ஸ்தாலி பாகம், சகலயாகங் களும் திரிசதி ஹோமம், பூர்ணாகுதி தீபாராதனை, பிரதட்சண நமஸ்காரம் வீணா வாத்ய சமர்ப்பணம், திருமறை, திருமுறை பாராயணம் கிரியா விளக்கம், திருவருட் பிரசாதம் வழங்கல்.

காலை 7.00 மணிமுதல் எண்ணைக்காப்பு சாத்துதல் (31.01.2015 சனிக்கிழமை தொடக்கம் 01.02.2015 ஞாயிறு மாலை 4.00 மணிவரை)

மாலை 3.00 மணிக்கு பண்ணிசை 4.00 மணிக்கு வேதபாராயணம், தேவார பாராயணம், பிள்ளையார் பூஜை, விசேட சந்தி, கோபூஜை, யாகபூஜை, சகஸ்ர நாமஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, பிரதட்சண நமஸ்காரம், திருமுறை, திருமுறை பாராயணம், நாதாஞ்சலி, திருவருட் பிரசாதம் வழங்கல்.

**இன்றைய கிரியைகளின் விளக்கம்**

வேதங்கள் தேவாரங்களால் தேவர்களை மகிழ்வித்து பிள்ளையாரை முதலில் வழிபாடு செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விசேட சந்தி**

சிவாச்சார்யர்கள் இக்கும்பாபிஷேகத்தின் பொருட்டு சம்கிதா மந்திர தேவர்கள், வித்தியேஸ்வரர்கள், தத்துவாதி தேவர்கள், தேவர்கள், இருஷிகள், சப்த மனுஷ்யர்கள், பூதர்கள், தேவபித்துருக்கள் விசேட பிதுர்கள் இவர்களை திருப்திப்படுத்துவதற்காக எள், அட்சதை இவைகளினால் தண்ணீர் ஊற்றி தர்ப்பணம் செய்வது விசேட சந்தி எனப்படும்.

**பூத சுத்தி**

பூத என்பது எமது தேகத்தைக் குறிக்கும். கும்பாபிஷேகத்தில் பங்கு பற்றும் சிவாச்சார்யர்கள் இக்கும்பாபிஷேகத்திற்கு ஏற்றவாறு தமது தேகத்தை சுத்தம் செய்யும் பொருட்டு தமது தேகத்தை மந்திர உச்சாடனங்களால் தூய்மைப்படுத்தி தமது இதயத்தில் இறைவனை எழுந்தருளச் செய்து தம்மை முற்றுமுழுதாக சிவமயமாகச் செய்வது இக்கிரியையின் ஓர் சிறப்பம்சமாகும்.

**பாவனாபிஷேகம்**

பாவனாபிஷேகம் என்பது யாகசாலையில் எழுந்தருளியிருக்கும் இறைவனுக்கு உபசாரம் செய்யும்போது ஸ்நானம் என்கின்ற அபிஷேகக் கிரமம் இருக்கிறது. அவ்வகையில் யாகசாலைக்கு முன்புறமாக வேதிகை வைத்து அதில் உற்சவ விநாயகரை வைத்து அபிஷேகம் செய்து கும்பத்தில் வீற்றிருக்கும் இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் பாவனையை இக்கிரியை விளக்குகிறது.

**ஸ்தாலி பாகம்**

பிரதான யாகசாலையில் அக்கினி மூலையில் அடுப்பு வைத்து யாகாக்கினியில் இருந்து அக்கினி எடுத்து சர்க்கரை அமுது தயாரித்து அவ்அமுதை ஒரு பாகம் அக்கினிக்கும் ஒரு பாகம் இறைவனுக்கும் ஒரு பாகம் சிவாச்சாரியர்களுக்குமாக பிரிக்கப்பட்டு நிவேதனம் செய்யப்படுவது இக்கிரியை.

அத்தோடு அக்கினியில் இருக்கும் இறைவனுக்கு அர்ச்சனை மந்திரங் களால் ஹோமம் செய்து பூர்ணாகுதி கொடுத்து வீணை வாத்தியங்களால் இறைவனை மகிழ்விப்பர். மாலை வழமைபோல் யாகபூஜைகள் ஹோமங்கள் நடைபெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தை மாதம் 18ம் நாள் (01.02.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு வேதபாராயணம், தேவாரபாராயணம், ஐங்கரன் ஆராதனை, விசேட சந்தி, யாகபூஜை, விசேட திரவ்ய ஹோமம் சகல யாகங்களும் மூலமந்திரஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, பிரதட்சண நமஸ்காரம், திருமறை, திருமுறை பாராயணம் வாத்தியாஞ்சலி, பிரசாதம் வழங்கல்.

மாலை 3.00 மணிக்கு வேதபாராயணம், திருமுறை பாராயணம், விநாயக வழிபாடு, விசேட சாந்தி, விம்ப சுத்தி, ரட்சாபந்தனம், யாக பூஜை, நியாசங்கள் ஸ்பர்சாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை, யாகப் பிரதட்சணம் திருமறை, திருமுறை பாராயணம், சர்வாஞ்சலி, பிரசாதம் வழங்கல்.

**இன்றைய கிரியைகளின் விளக்கம்**

வழமைபோல் விநாயகப்பெருமானை பூஜைசெய்து யாகங்களில் பூஜைகள், ஹோமங்கள் நடைபெற்று யாகத்திலே எழுந்தருளியிருக்கும் இறைவனை இசையால் மகிழ்வித்தல்.

மாலை நிகழ்வுகள் வழமைபோல் ஐங்கரக் கடவுளை வழிபாடு செய்து விம்பசுத்தி செய்வர்.

விம்ப சுத்தியாவது முறைப்படி பதினாறு கும்பங்கள் வைத்து அதற்குரிய திரவியங்களையிட்டு பூஜித்து விக்கிரகங்களுக்கு அபிஷேகம் செய்வதன்மூலம் விம்பத்தில் இருக்கின்ற தோஷங்கள் நீங்கி பரிசுத்தமாகும்.

அதன்பின் விக்கிரகங்களுக்கு காப்புக்கட்டி நியாசங்கள் செய்வர். நியாசமாவது இறைவனது திருவுருவத்தில் ஒவ்வொரு பாகங்களையும் சிவாச்சார்யர்கள் மந்திர உச்சாடனம் செய்து பூஜை செய்வதன்மூலம் இறை சக்தி பெருகும். அதன்பின் ஸ்பர்சாகுதி செய்தல்.

**ஸ்பர்சாகுதி**

அக்கினியில் இருக்கும் இறைவனுக்கும் கும்பத்தில் இருக்கும் இறை சக்திக்கும் மூலாலயத்தில் இருக்கும் விக்கிரகத்துக்கும் நாடி எனப்படும் மெல்லிய நூலினால் தொடர்புசெய்து அதன்மூலம் மும்முறை வழிபாடு செய்து முழுவதுமாக இறைசக்தியை மூலவிக்கிரகத்தில் கொண்டு சென்று ஒடுக்குவது ஸ்பர்சாகுதி எனப்படும். அதன்பின் பூஜைகள் வழிபாடுகள் செய்வர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருதடி விநாயகரின் பெரும் குடமுழுக்கு நன்நாள்

தை மாதம் 19ம் நாள் (02.02.2015) திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு வேதபாராயணம், தேவார பாராயணம், மருதடி விநாயகர் வழிபாடு, யாக பூஜை, ஹோமங்கள், பூர்ணாகுதி, உபசார ஹோமம், மஹா பூர்ணாகுதி, பிரதட்சண நமஸ்காரம், தீபாராதனை, வேத ஸோத்திர, கீத, வாத்ய, நாட்டிய உபசாரம், தசதானம், அந்தர்பலி, பகிர்பலி, தொடர்ந்து 6.00 மணி தொடக்கம் சுந்தர விமானங்கள் அபிஷேகம், நாற்புறமும் வானளாவ உயர்ந்து நிற்கும் பொன்வர்ண ராஜகோபுரங்கள் வசந்த மண்டப விமானங்கள், மணிக்கூட்டு விமானம், தேர்மிட்டி விமான அபிஷேகங்கள் அதனைத் தொடர்ந்து பிரதான கும்பங்கள் வீதியுலா புஸ்பாஞ்சலி தொடர்ந்துவரும் காலை 9.45 மணிமுதல் 10.45 மணிவரையிலான மீனலக்ன சுபவேளையில் மருதடி விநாயகருக்கும் ஏனைய தெய்வங்களுக்கும் மஹா கும்பாபிஷேகம், ஸ்திராகுதி, தசதர்சனம், பதிகம்பாடி, திருக்கதவம் திறத்தல், எஜமான் அபிஷேகம், ஆசீர்வாதம், மஹா அபிஷேகம், விசேட பூஜை பிரசாதம் வழங்கல்.

மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து சர்வாலங்கார பூஜிதராக மூஷிக வாகனம் ஏறிய எம் மருதடி நாயகன் அலங்கரிக்கப்பட்ட தண்டிகையில் வீதியுலாவரும் காட்சியும் இடம்பெறும்.

தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும் தினமும் அதிகாலை 4.30 மணி அபிஷேகம், 6.00 மணி பூஜை, மதியம் 10.30 மணி அபிஷேகம். 12.00 மணி பூஜை, தினமும் மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் திருவீதியுலா மண்டலப் பூர்த்தி பங்குனி மாதம் 5ம் நாள் (19.03.2015) வியாழக்கிழமை 1008 கலச சங்காபிஷே கம். மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து பார்வதி பரமேஸ்வரர், விநாயகர், சுப்பிரமணியர் சுவாமிகள் வீதியுலா வருவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹா கும்பாபிஷேகம்

ஆன்ம விடுதலைக்கு அவசியமான கிரியைகளைப் பற்றியும், அவை நடத்துவதற்குரிய இடமான ஆலயம் பற்றியும், திருவுருவங்களைப் பற்றியும் பார்த்தோம். அத்தகைய ஆலயமொன்றிலே திருவுருவத்தை ஸ்தாபித்து அங்கு தெய்வ சாந்நித்தியத்தை ஏற்படுத்துவதே மஹா கும்பாபிஷேகம் என்னும் பெருவிழாவாகும். பிரதிஷ்டை எனவும் இதனைக் கூறுவர். பிரதிஷ்டை என்பது நன்கு நிலைநிறுத்துதல் எனப் பொருள்படும்.

பிரபஞ்சமெங்கும் பரந்து விரிந்து நிற்கும் பரம்பொருளைச் சிவாசாரியார் மந்திரம், பாவனை, கிரியைகளின் மூலமாக அக்கினியிலும் கும்பத்திலும் ஆவாகனம் செய்து வழிபட்டு அங்கு ஸ்தாபிக்கப்பட்ட திருவுருவத்திலே சேர்த்து நிலைபெற்றிருந்து ஆன்மகோடிகளுக்கு அருள்புரியுமாறு செய்தலே மஹா கும்பாபிஷேகத்தின் நோக்கமாகும்.

இக்கிரியையின் தத்துவார்த்த உட்பொருளைச் சிறிது சிந்திக்கலாம். இறைவன் பிரபஞ்சம் முழுதும் பரவியுள்ளவன் என்பதும், கட்புலனாகாதவனாயும், உணர்வுகளுக்கு எட்டாதவனாயும், அதேநேரம் அடியார்க்கு எளியவனாகவும் இருப்பவன் என்பதும் சாஸ்திர நூற்றெளிவு.

பாலிலே தோன்றாது மறைந்திருக்கும் நெய்யைப் படிப்படியான கிரியை முறைகளினால் தோற்றுவித்துக் கையிலே பெறுவதுபோல, (பாலைக் காய்ச்சித் தயிராக்கி அதனைக் கடைந்து வெண்ணெய் எடுத்து உருக்கி நெய்யைப் பெறுதல் படிமுறையான கிரியைகள்) பிரபஞ்ச மூலங்களான பஞ்ச பூதங்களின் மார்க்கமாகப் படிப்படியாகப் பரம்பொருளை அண்மிவரச் செய்பவை கும்பா பிஷேகக் கிரியைகள்.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன பஞ்சபூதங்கள் கலப்பினால் பஞ்சபூதங்களின் வடிவாக இருப்பவன் பரம்பொருள். பஞ்சபூதங்கள் வடிவமாக மட்டுமன்றி சூரியன், சந்திரன், யஜமானன் ஆகியனவும் சேர்ந்த அட்டமூர்த்தி களின் வடிவமாகவும் இறைவன் இருக்கிறான்.

ஆகாய வடிவில் எங்கும் பரந்துள்ள ஆண்டவனை உணருதல் மிகவும் சிரமம். எமது புலன்களால் சிறிது உணரும் வகையில் வாயுவாக அவனை அறிதல் முதற்படி. வாயுவும் கண்ணால் தரிசிக்கமுடிவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கடுத்தபடியில் அக்கினியாக ஆண்டவனைக் காண்கிறோம். மூன்றாவதுபடி நீராக இறைவனை அறிதல். அதற்கும் அடுத்தபடி எந்நேரமும், எல்லா வகைகளிலும் எம்மோடு தொடர்புற்றதும், நிலைபெற்றிருப்பதும், நாம் நிலை பெற்றிருக்க வகை செய்வதுமாகிய மண் என்னும் ஐந்தாவது நிலை. இந்நிலை யில் இறைவனைக் கண்டு வழிபடுதலே எம்மனோர்க்கு இசைந்த எளிய நிலை. இவ்வகையில் மண்ணோடு தொடர்பு கொண்டிருக்கும் கருங்கல்லும், செம்பு முதலிய உலோகங்களும் இறையருளை ஆகர்ஷித்து எமக்கு வழங்கும் பெருஞ்சக்தி வாய்ந்தவையாக இருக்கின்றன.

"(ப்ரம்மண) ஆகாச: ஸம்பூதம்:
ஆகாசாத் வாயு
வாயோ ரக்நி:
அக்நே ராப:
அத்ப்ய: ப்ருதிவீ"

என்று இந்தப் பஞ்சபூதப் படிமுறையை எடுத்துக்கூறுகிறது தைத்திரீய உபநிஷத்து. இவ்வைந்தும் தழுவியதாகக் கும்பாபிஷேகக் கிரியைகள் அமைவது கண்கூடு. யாகசாலையில் ஆகாய வெளியும் காற்றும் உள்ளன. அங்கு அக்கினி வளர்க்கப்படுகிறது. கும்பங்களில் நீர்நிறைக்கப்பெற்று அதிலேயே இறையருட்சக்தி ஆவாகனமாகிப் பின் மூர்த்தியில் அபிஷேகமாகிறது. கும்பம் உருவாக்கப்பட்ட உலோகம் பிருதுவி அம்சம். மண்ணோடு தொடர்புபட்டது. (மண்குடமே பயன்படுத்தப்படுவதும் உண்டு) இறுதியில் அபிஷேகமாகி ஸ்தாபிக்கப்பெறும் ஸ்தானமும் பிருதுவியுடன் தொடர்பான கருங்கல் விக்கிரகம் அல்லது உலோக விக்கிரகமாகும்.

இத்தகைய பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் அநாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம் என நால்வகைப்படுமென்று சிவாகமங்கள் வகுத்துரைக்கின்றன. ஆலயம் இல்லாத இடத்தில் புதிதாக ஆலயம் அமைத்து அங்கு புதிதாக ஒரு மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வது அநாவர்த்தனப் பிரதிஷ்டை. முன்பிருந்த ஆலயம் முற்றாய் அழிந்துவிட்டால், அவ்விடத்தில் மறுபடி ஓர் ஆலயத்தை அமைத்துக் கும்பாபிஷேகம் செய்தல் ஆவர்த்தனப் பிரதிஷ்டை, பூஜை வழிபாடுகள் நிகழும் கோயிலில் திருத்த வேலைகளுக்காக பாலஸ்தாபனம் செய்து திருத்த வேலைகள் முடிந்தபின் மறுபடி மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வது புனராவர்த்தனப் பிரதிஷ்டை. ஆலயத்தினுள் மரணம் நிகழுதல், கள்வர் முதலிய ஆசாரக்குறைவுடையோர் நுழைதல் போன்ற காரணங்களால் நிகழும் பிரதிஷ்டை அந்தரிதப் பிரதிஷ்டை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நான்கு வகைகளில் அந்தரிதப் பிரதிஷ்டைக்கு சுபமுகூர்த்த நிர்ணயம் கிடையாது. ஏனைய மூன்று வகைப் பிரதிஷ்டைக்கும் சுபமுகூர்த்தம் நிர்ணயித்தல் அவசியம். திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் ஆகிய ஐந்தும் சுத்தமாக இருக்கும்படியும், லக்கினம் ஸ்திரராசியாக இருக்கும்படியும், கிரகங்கள் அநுகூலமான இடங்களில் இருக்குமாறும் நன்கு கவனித்து முகூர்த்தம் நிர்ணயிக்கப்படும்.

மேலும் மஹா கும்பாபிஷேகத்தை நடத்திவைக்கும் சிவாசாரியாருக்கும், ஆலயம் தர்மகர்த்தாவுக்கும் அநுகூலமானதாகவும் இம்முகூர்த்தத்தைக் கணித்துக்கொள்வர்.

கும்பாபிக்ஷேக விழாவானது பலஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்வதால் இதனைத் தரிசித்தல் பெரும் பேறாகும், யாகதரிசனம் செய்தலும், ஓமப்புகை யைச் சுவாசித்தலும், மந்திர ஒலிகளைக் கேட்டலும் உடல்நலத்தையும், புண்யத்தையும் ஒருங்கே தருவன என்று அறிஞர் கூறுவர்.

கும்பாபிஷேகமானது பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு தடவையாவது நடைபெறவேண்டுமென்பது விதி, தெய்வசாந்நித்தியத்தை வலுப்படுத்தி, அருட் சக்தியை அதிகரிக்கச் செய்ய இது அவசியம். கருங்கல்லினால் செய்யப்பட்ட பீடத்திலே கருங்கல் விக்கிரகத்தை வைத்து எட்டுப் பொருட்களின் கலவையான அஷ்டபந்தனம் என்ற மருந்தினால் அவை இணைக்கப்படுகின்றன.

பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், யஜமானன் ஆகிய அஷ்டமூர்த்திகள் அம்சமான குங்கிலியம், கொம்பரக்கு, சுக்கான்கல், தேன்மெழுகு, நற்காவி, செம்பஞ்சு, எருமைவெண்ணெய், சாதிலிங்கம் என்னும் எட்டுப் பொருட்களையும் உரிய அளவில் சேர்த்து இடித்துத் தயாரிக்கப்படுவதே அஷ்டபந்தனமாகும்.

பூரணமான ஒரு மஹா கும்பாபிஷேகமானது அறுபத்துநான்கு வகையான அங்கக் கிரியைகளைக் கொண்டது எனச் சில ஆகமங்கள் கூற, வேறு சில ஆகமங்கள் அதனைச் சுருக்கி ஐம்பத்தைந்து கிரியைகளையுடையது எனவும் விதிக்கின்றன.

இவற்றுள் முகூர்த்த நிர்ணயம், ஆசார்யவர்ணம், சல்யஉத்தாரணம், திரவியபாகம், கர்ப்ப நியாசம், கணேச பூஜை, அநுஜ்ஞை, கிராமசாந்தி, பிரவேசபலி, ரக்ஷோக்ன ஹோமம், சாந்திஹோமம், மூர்த்திஹோமம், வாஸ்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தி, நவக்கிரக மகம், மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், ஜலாதிவாசம், தான்யாதிவாசம், நயனோன்மீலனம், கிராமப் பிரதக்ஷிணம், சயனாரோபணம், அக்கினிகாரியம், நாமகரணம், பிம்பசுத்தி, பிம்பப் பிரதக்ஷணம், கர்ப்பக்கிருக பதவிந்நியாசம், ரத்நநியாசம், யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், அக்ஷ்டபந்தனம், ஷடத்துவ நியாசம், சாங்கோபாங்கப் பிரத்தியங்க நியாசம், ஸ்பர்ஸாகுதி, யாத்ராதானம், கும்பஉத்தாபனம், சகளீகரணம், ஆவாகனம், கும்பாபிஷேகம், ஆசீர்வாதம், ரஷாவிசர்ஜனம், அவபிருதம், ஆசார்யோத்சவம் என்பன முக்கியமான கிரியைகளாகும்.

சல்யோத்தாரணம், ஜலாதிவாசம், தான்யாதிவாசம், நயனோன்மீலனம், கிராமப் பிரதக்ஷணம், சயனாரோபணம், நாமகரணம் முதலிய கிரியைகள் புதிய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்யும்போது மட்டுமே நடைபெறும். ஏனைய வற்றுக்கு இவை இல்லை.

கும்பாபிஷேகத்தின் அங்கக்கிரியைகளை நோக்குமுன் பாலஸ்தாபனம் என்பது பற்றிச் சிறிது நோக்குவோம். வழிபாடு நடந்துவரும் ஒரு ஆலயத்திலே திருத்தவேலைகள் செய்யப்பட வேண்டிய ஒரு தேவை ஏற்பட்டால், அல்லது குறிப்பிட்ட பன்னிரண்டு வருட காலகட்டம் கடந்துவிட்டால் அங்கு புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெறவேண்டும். அதற்காக அங்குள்ள மூலமூர்த்தி யிலே உள்ள தெய்வ சாந்நித்தியத்தை 'கலாகர்ஷணம்' முதலிய கிரியைகளின் மூலம் கும்பத்திலும் சித்திரத்திலும் ஆவாகனம் செய்து, பின்னர் மூர்த்தியை ஆலயத்தின் வேறொரு பாகத்தில் புதிதாக விதிமுறைப்படி அமைக்கப்பெற்ற பாலாலயத்தில் (இளங்கோயில்) ஸ்தாபித்து அங்கு அபிஷேகம் செய்து மூர்த்தியை மறுபடி ஆவாகனம் செய்து வைப்பர். இதுவே பாலஸ்தாபனம் எனப்படும்.

கும்பாபிஷேகத்தின் சில முக்கியமான அங்கக் கிரியைகளின் அர்த்தமும், நோக்கமும் இனிக் கூறப்படும், இக்கிரியைகள் மிக விரிவானவை என்பதால் கிரியைகளின்போது நடைபெறுகின்ற யாவற்றையும் விரிவாக எடுத்துக் கூறுவதற்கில்லை.

**ஆசாரிய வரணம்**

பிரதிஷ்டா கும்பாபிஷேகத்தை நிகழ்த்தப்போகும் சிவாசாரியாரைத் தேர்ந்தெடுத்து அவரிடம் கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்துமாறு வேண்டுவதே இதன் அர்த்தம். சிவாசாரியாரைச் சிவனாகவே பாவித்து அவரைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஜித்து கும்பாபிஷேகத் திரவியங்களை அவரிடம் ஒப்புவித்தல் கோயில் எஜமானது கடமையாகும். (வரணம் = வரித்தல்)

**திரவிய விபாகம், திரவிய சுத்தி**

கும்பாபிஷேகத்திற்குரிய பொருட்களை முறைப்படி மந்திரசகிதமாக அந்தந்தத் தேவைகளுக்கேற்பப் பிரித்தலே திரவிய விபாகம் எனப்படும். கும்பாபிஷேகத்திற்கென ஒதுக்கிய பணத்தை (ஏறக்குறைய ஆலய நிர்மாணத் திற்குச் செலவான தொகைக்குச் சமனான தொகையையே கும்பாபிஷேகத் திற்கும் செலவிடவேண்டும் என்பது ஆகமநூற் கருத்து) பதினொரு பங்காக வகுத்து இரண்டு பங்கு யாகசாலைக்கும், ஒரு பங்கு அபிஷேகத்திற்கும், ஒரு பங்கு சிவாசாரியாருக்கும், இரண்டு பங்கு இருத்துவிக்குகளுக்கும், ஒரு பங்கு வேதாத்தியனத்திற்கும், ஒரு பங்கு தஷிணைகளுக்கும், ஒரு பங்கு பிராமண போஜனம், அன்னதானம் என்பவற்றுக்கும், ஒரு பங்கு பரிசாரகர், வாத்தியகாரர், சிற்பாசாரி முதலியவர்களுக்கும், ஒரு பங்கு யாகத் திரவியங்களுக்குமாகப் பங்கிடுவர். இதன்பின் இவற்றை முறைப்படி சுத்திசெய்தல் திரவிய சுத்தி எனப்படும்.

அநுஜ்ஞை, கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப் பணம், ரக்ஷாபந்தனம்

இவற்றின் விபரங்கள் மஹோற்சவம் என்ற அத்தியாயத்தில் தரப்பட் டுள்ளன.

**பிரவேசபலி**

இடையூறுகள் நீங்கி, ஆரம்பிக்கும் காரியம் இனிது நிறைவேறும் பொருட் டாகவும் குற்றம் குறைகள் தவிர்க்கப்படுவதற்காகவும் செய்யப்படும் இக்கிரியை யும் கிராமசாந்தி வாஸ்துசாந்தி இவைகளைப் போன்றதே, ஆயின் இதில் பிரம்மஸ்தானம் இந்திரஸ்தானம் முதல் ஈசானஸ்தானம் வரையிலான ஸ்தானங் களாகிய நவசந்திகளிலும் அந்தந்தத் தேவதைகளை அவர்களுக்குரிய மண்டலங்களை அரிசிமாவினால் வரைந்து அங்கு ஆவாகனம் செய்து, வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், கமுகம்பூ, நெற்பொரி, இளநீர் என்பவற்றை நிவேதித்து பலியுருண்டைகளையும் வழங்கி மகிழ்விப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரக்ஷோக்ன ஹோமம்**

ராக்ஷோக்ன தேவரைத் (ராக்ஷசர்களை அழிப்பவர்) திருப்தி செய்யும் இக்கிரியையின் நோக்கமும், பிரவேசபலி, கிராம சாந்தி என்ற இவை போன்றதே. ஆனால் இக்கிரியையில் அக்கினி காரியம் முக்கிய இடம்பெறுகிறது. பருத்தி, மிளகு, எள், வெண்கடுகு முதலியவற்றால் ஹோமம் செய்வர். இக்கிரியை ஆலய மண்டபத்தினுள்ளே நிகழும்.

திசாஹோமம், சாந்திஹோமம், சம்ஹிதா ஹோமம், மூர்த்திஹோமம் முதலியன

சிவாஸ்திரதேவர், பாசுபதாஸ்திரம், சம்ஹிதா மந்திரங்கள், பிரதான மூர்த்தி இவர்களைத் தனித்தனியே கும்பங்களில் ஆவாகனம் செய்து பூஜித்து அக்கினி வளர்த்து அங்கும் அவர்களை ஆவாகனம் செய்து ஹோமங்கள் நிகழ்த்தப்படும். திசாஹோமத்தின் முடிவில் அங்கு பூஜிக்கப்பட்ட நான்கு கும்பங்களையும் எடுத்து அவற்றின் நீரைக் கோபுர வாசலில் இருந்து வீதிவலமாகச் சொரிந்து காவலிடப்படுகிறது.

**நவக்கிரக மகம்**

பரிவார தெய்வங்களில் நவக்கிரகங்களுக்குத் தனியிடம் உண்டு. ஆன்மகோடிகளோடு நேரடித் தொடர்புகொண்டு தமது கதிர்வீச்சுக்களால் உலகியல் வாழ்க்கையில் பல்வேறு மாற்றங்களையும் பலாபலன்களையும் செய்கின்றவர்கள் நவக்கிரக நாயகர்கள். இவர்களைக் கும்பத்திலும் அக்கினி யிலும் ஆவாகனம் செய்து உபசாரங்கள், ஆகுதிகள் வழங்கி வழிபடுவது நவக்கிரக மகம் எனப்படும். (மகம் - யாகம்)

**நயனோன்மீலனம்**

நயன உன்மீலனம் எனப் பிரிந்து கண் திறத்தல் என்ற பொருளை இச்சொல் வெளிப்படுத்தும். ஓவியம் சிற்பம் என்பன உருவாகி முடிந்ததும் இறுதியாகவே கண்திறத்தலைச் செய்வர். இங்குமுறைப்படி பூஜை, அக்கினிகாரியம் என்ப வற்றை நிகழ்த்தித் திரையிட்டு மூர்த்தியின் திருவுருவத்திலே தங்க ஊசியால் கண்களைத் திறந்து தானியக்குவியல் மீது விக்கிரகத்தை வைத்துப் பொன், தேன், நெய், தானியங்கள், பிராம்மணர்கள், தீபம், கண்ணாடி, நிறைகுடம், சந்நியாசி, பக்தஜனங்கள் ஆகியோரைத் தரிசிக்கச் செய்வர். சிற்பாசாரி சம்பாவனை செய்து கௌரவிக்கப்படுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜலாதிவாசம்

நயனோன்மீலனம் செய்யப்பட்ட விக்கிரகத்தை நீரில் அமிழ்த்தி வைத்தலே ஜலாதிவாசம் எனப்படும். இதற்கெனத் தயார்செய்யப்பட்டசிறு கிணற்றிலே (தொட்டி) புனித தீர்த்தங்களை நிரப்பி அதனுள் ஆசனத்தின்மீது கழுத்தளவு நீரில் கிழக்கு நோக்கி விக்கிரகத்தை இருக்கச் செய்வர். தொட்டி தயார் செய்யும் சிரமத்திற்காகப் பெரிய பாத்திரங்களைப் பயன் படுத்துவதுமுண்டு.

மீன், தவளை, பாம்பு முதலிய நீர்வாழ் பிராணிகளைப் பொன்னால் அல்லது வெள்ளியாற் செய்து இதனுள் போடுவதுமுண்டு.

### தான்யாதிவாசம்

இதன்பின் விக்கிரகத்தைத் தானியங்களால் மூடிவைப்பர். இதுவே தான்யாதிவாசம் எனப்படும். இவ்விரு அதிவாசக்கிரியைகளும் பிருதுவி, அப்பு ஆகிய இரு அம்சங்களுடனும் பரம்பொருளுக்குமுள்ள தொடர்பை வலுப்படுத்துவதாக அமைகிறது.

### பிரசன்னாபிஷேகம் பிரசன்னபூஜை

புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகத்திற்கு மட்டும் இக்கிரியை உண்டு. மூலமூர்த்தியிலுள்ள தெய்வசாந்நித்தியத்தைக் கும்பத்திலே ஒடுக்குமுன் விசேஷ ஸ்நபனாபிஷேகம் செய்து தீபாராதனை, பூஜைகள் செய்வது மரபு. இதுவே பிரசன்னாபிஷேகம், பிரசன்ன பூஜை என வழங்கப்படுகிறது.

### கடஸ்தாபனம்

கும்பம் வைப்பதற்கான நெல், அரிசி, பயறு, உழுந்து, எள், நவதானியம், நெற்பொரி, தர்ப்பை இவற்றை உரிய மந்திரங்கள் ஓதியவாறு முறைப்படி பரப்பிக் குடத்தைக் கழுவி, நூல்சுற்றி, தூபம்காட்டி இதனுள் சந்தனம், நீர், பவித்திரம், நவரத்தினம், பொன் முதலியவற்றையிட்டு மாவிலை, தேங்காய் என்பவற்றை வைத்து பட்டு, பூணூல், கூர்ச்சம், மாலை, பூ, சந்தனம் இவற்றைச் சாத்தி கும்பாபிஷேகத்திற்குரிய பிரதான கும்பங்களை அமைத்தலே கடஸ்தாபனமாகும். இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே வேதமந்திரங்கள் ஓதப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாகர்ஷணம்**

பிம்பம் எனப்படும் விக்கிரகத்திலிருந்து இறையருட்சக்தியை - தெய்வ சாந்நித்தியத்தை - கும்பத்திலே வரச்செய்தலே கலாகர்ஷணமாகும். பலவித மான நியாசங்கள் மூலமாக இதனைச் செய்து கடஸ்தாபனம் செய்யப்பட்ட கும்பத்தில் மூர்த்தியை எழுந்தருளச் செய்தபின்னர் கும்பத்தை யாகத்திலே ஸ்தாபிப்பர்.

**விசேஷ சந்தி**

பூர்வாங்கக் கிரியைகள் நிறைவுற்றதும் சிவாசாரியார்கள் எல்லோரும் தமது நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்தபின் ஓரிடத்தில் வரிசையாக அமர்ந்து விசேஷ சந்தியா வந்தனத்தில் ஈடுபடுவர். இது சகளீகரணம், அங்கநியாசம், காயத்திரி ஜெபம், மற்றும் பல்வேறுவகையான தர்ப்பணங்களும் அடங்கிய கிரியையாகும். (தர்ப்பணம் - மந்திர நீர் சொரிந்து தேவர்கள் முதலானோரை மகிழ்வித்தல்)

**சயனாரோபணம்**

தானியங்களைப் பரப்பி மான்தோல் முதலியவற்றை விரித்து, அதன்மேல் மெத்தை, தலையணை, விரிப்பு என்பவற்றை அமைத்து மூர்த்தியை அங்கு எழுந்தருளச்செய்து கிழக்கே தலைவைத்து மேல்நோக்கியபடி சயனிக்கச் செய்து செந்நிறத் துணியினால் மூடி இறைவனைத் துயிலவைக்கும் பாவனையே சயனாரோபணமாகும். (ஆரோபணம் - ஏற்றுதல்)

**தீபஸ்தாபனம்**

மண்டபத்திலே வைத்து சர்வாலங்காரங்களுடன்கூடிய தீபமொன்றை ஏற்றி அதனை அர்ச்சித்து ஒரு சுமங்கலிப் பெண் அதனை ஏந்தியபடி வீதிவலம்வரச் செய்து மூலஸ்தானத்தில் அதனை வைத்தலே தீபஸ்தாபனம் எனப்படும். இத்தீபம் கும்பாபிஷேகம் முடியும்வரை அணையாது பாது காக்கப்படும்.

**பிம்பஸ்தாபனம்**

ஆதாரசிலை எனப்படும் பீடக்கல்லினை உரியமுறைப்படி பொருத்தி அமைத்தபின் அதன்மேல் நவரத்தினங்களையும், பஞ்சலோகம் முதலியவற் றினையும் உரியமுறைப்படி மந்திர சகிதமாகப் பதித்து நியாசம்செய்து அதன்மேல் யந்திரத்தையும் ஸ்தாபித்து அது சேதமுறாவண்ணம் அதன்மேல் பஞ்சினைப் பரப்பிவைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சயனத்திலிருந்து மூர்த்தியை எழுந்தருளச்செய்து வீதிவலமாகக் கொண்டுவந்து இந்த ஆசனத்தின்மீது வைத்து அஷ்டபந்தன மருந்தினைச் சாந்தி மூர்த்தியைப் பீடத்துடன் இறுகப் பொருத்துவர்.

**யந்திர பூஜை**

இங்கு பதிக்கப்பெறும் யந்திரமானது உலோகத்தகட்டிலே வரையப்பட்ட அந்தந்த மூர்த்தியினது அம்சங்களைக் கொண்டதாக அமையும். இது கும்பாபிஷேகத்திற்கு சுமார் ஒரு மண்டலம் முன்பதாகவே தயார் செய்யப்பட்டுத் தினமும் அபிஷேகம் பூஜை செய்யப்பெற்றுத் தெய்வ சாந்நித்தியம் பெற்றதாக இருக்கும்.

**தைலாப்பியங்கம் (எண்ணெய் சாத்துதல்)**

விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டதும் சிவாசாரியார் அதற்கு எண்ணெய் சாத்திய பின்பு பக்தர்கள் யாவரும் தாமே தமது கைகளால் எண்ணெய் சாத்தி வணங்குவர். நல்லெண்ணெய், சந்தனாதித்தைலம் முதலிய வாசனைத் தைலங்கள் என்பன இதற்குப் பயன்படும். இது பாப நிவர்த்தியைச் செய்யும்.

**பிம்பசுத்தி**

மூர்த்தியின் திருவுருவத்திலுள்ள தோஷங்கள் நீங்குவதற்காகப் பிம்ப சுத்தி செய்யப்படுகிறது. பலவிதமான புண்ணிய தீர்த்தங்களாலும், இதற்கென விதிக்கப்பட்ட பலவிதமான மரப்பட்டைக் கஷாயங்களாலும் மூர்த்திக்கு அபிஷேகம் செய்கின்றனர். இதனால் பிம்பம் சுத்தமடைகிறது.

**விசேஷ திரவிய ஹோமம்**

பலவிதமான சமித்துக்கள், தானிய வகைகள் என்பவற்றை அவற்றுக் குரிய மந்திரங்களை ஓதி அக்கினியில் இட்டு ஆகுதி வழங்குவர். இந்த விசேஷத் திரவியங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பலன் சிறப்பாகச் சொல்லப்படு கின்றது.

**யாகசாலையின் அமைப்பு**

பஞ்சபூத விளக்கமாக யாகசாலை அமைவதை முன்னர் கண்டோம். யாகசாலை கோயில் பிரகாரத்தினுள்ளே ஈசானம், அக்கினி, வடக்கு, மேற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய திசைகளில் அமையலாம். நன்கு மெழுகித் தூய்மைப்படுத்திய தரையை யும், நடுவே வேதிகை என்று சொல்லப்படும் மேடையையும் யாகசாலையின் பிரமாணத்துக்கேற்ற எண்ணிக்கையுள்ள தூண்களையும் கொண்டதாக மேலே வேயப்பட்டு வெள்ளை கட்டிய விதானத்துடன் யாகசாலை அமையும்.

ஐந்துவகையான யாகசாலைகள் உள்ளன. யாகசாலையைப் பதங் களாகப் பிரிப்பதில்தான் இந்த வேறுபாடுகள் ஏற்படுகின்றன. மாவில் தோய்த்த நூலினால் சூத்திரங்களை அடித்துப் (கோடுகள்) பதங்களை ஏற்படுத்துவர்.

நாற்பத்துநான்கு சூத்திரங்களை இருபுறமும் இடுவது ருத்திர சூத்திரக் கிரமம் எனப்படும். இதில் 43x43=1849 பதங்கள் உண்டாகும். முப்பத்துநான்கு சூத்திரங்கள் அடிப்பது விஷ்ணு சூத்திரக் கிரமம். இருபத்துநான்கு சூத்திரங்கள் அடிப்பது பிரம்ம சூத்திரக் கிரமம். பதினான்கு சூத்திரங்கள் அடிப்பது மனு சூத்திரக் கிரமம். பன்னிரண்டு சூத்திரங்கள் அடிப்பது ரவிசூத்திரக்கிரமம்.

ரவி சூத்திரக்கிரமத்தில் நூற்று இருபத்தொரு பதங்கள் உருவாகும். கும்பங்களுக்கான வேதிகை, நடுவில் அமையும். அதனைச் சுற்றிலும் சஞ்சார பதங்கள், ஓமகுண்டங்கள், பரிவார யாககும்பங்கள் என்பன அவற்றுக்குரிய இடங்களில் அமையப்பெறும்.

ருத்திர சூத்திரக்கிரம யாகசாலையில் முப்பத்துமூன்று குண்டங்களும், விஷ்ணு சூத்திரக் கிரமத்தில் இருபத்தைந்து குண்டங்களும், பிரம சூத்திரக் கிரமத்தில் பதினேழு குண்டங்களும், மநுசூத்திரக்கிரமம், ரவிசூத்திரக் கிரமம் இரண்டிலும் ஒன்பது குண்டங்களும் அமையும்.

வசதி குறைந்த இடங்களில் ரவிசூத்திரக்கிரம யாகசாலை அமைத்து அங்கு ஐந்து குண்டங்கள் அமைப்பர். ஒவ்வொரு வரிசையிலும், கிழக்கே சதுரக் குண்டமும், தென்கிழக்கே யோனி குண்டமும், தெற்கில் அர்த்தசந்திரக் குண்டமும், தென்மேற்கில் திரிகோணகுண்டமும், மேற்கில் விருத்த குண்டமும், வடமேற்கில் அறுகோண குண்டமும், வடக்கில் பத்ம குண்டமும், ஈசானத்தில் எண்கோண குண்டமும் அமையும். பிரதான குண்டம் வேதிகைக்கு முன்பாக அல்லது ஈசானத்திற்கும் கிழக்குக்குமிடையே அமையும்.

ஐவகை யாகசாலைகளுக்கும் முறையே நூறு, அறுபத்துநான்கு, முப்பத்தாறு, பதினாறு என்ற எண்ணிக்கையில் தூண்கள் அமையும். மாவிலை, தோரணம், மாலைகள், பட்டு, கொடி, கரும்பு, கமுகு, இளநீர் முதலியவற்றால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகசாலையை அலங்கரிப்பர். அஷ்டமங்கலம், தசாயுதம் என்பனவும் யாக சாலையை அலங்கரிப்பன.

**யாகபூஜை**

யாகசாலையில் பிரவேசிக்கும் சிவாசாரியார் முதலில் விக்னேஸ்வர பூஜை, புண்யாகவாசனம் என்பவற்றைச் செய்தபின் சூரியபூஜை, துவார பூஜை, தோரணங்கள், திரிசூலங்கள், கொடிகள் ஆகியவற்றின் அதிதேவதைகளுக்கான பூஜை, பரிவார கும்ப பூஜை, அஷ்டமங்கல பூஜை, யாகேஸ்வரன் யாகேஸ்வரி பூஜை என்பவற்றையும் செய்வார்.

இதன்பின் பிரதான வேதிகையிலுள்ள ஸ்நபன கும்பங்களில் பஞ்சாசன பூஜை, ஆவரண பூஜை என்பவற்றை நிகழ்த்திப் பலவித நியாசங்கள் மூலமாக மந்திரசக்திகளைக் கும்பத்திலே பதித்துப் பூஜிப்பார்.

பின்னர் பிரதான குண்டத்திலே பிரதான சிவாசாரியார் அக்கினிகாரியம் செய்ததும், அதிலிருந்து அக்கினியைப் பிரித்தெடுத்து ஏனைய குண்டங்களுக் குரிய சிவாசாரியார்கள் தங்கள் குண்டங்களில் இட்டு அக்கினி காரியம் செய்வர்.

இவ்வாறு பிரதான குண்டத்திலிருந்து அக்கினியைப் பிரித்துக் கொடுப்பது அக்கினி விபஜனம் எனப்படும்.

யாகபூஜை, பகலில் சூரிய பூஜையுடனும் இரவில் சந்திர பூஜையுடனும் ஆரம்பிக்கும்.

**ஸ்பர்சாகுதி**

யாகசாலையிலே அக்கினியிலும் கும்பத்திலும் ஆவாகனம் செய்து பூஜிக்கப்பட்ட தெய்வ சாந்நியத்தை பிம்பத்திலே ஒடுக்குவதே ஸ்பர்சாகுதி யாகும். அக்கினியுடன் கும்பத்தையும், கும்பத்துடன் பிம்பத்தையும் தர்ப்பைக் கயிறு, நூல் முதலியவற்றால் நாடீசந்தானம் செய்து (தொடுத்து) மும்முறை யாககுண்டத்திலும் மூலமூர்த்தியிலுமாக ஸ்பர்சாகுதி செய்து இறுதியில் நாடீசந்தானத்தை மூலமூர்த்தியில் சேர்த்து விடுவர்.

**பூர்ணாகுதி**

இறுதியில் பிரதான சிவாசாரியார் பிரதான குண்டத்தில் பூர்ணாகுதி வழங்கியதும் ஏனைய சிவாசாரியர்களும் தத்தம் குண்டங்களில் பூர்ணாகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்துப் பிரதான குண்டத்தில் அக்கினி சம்யோஜனம் செய்வர். பின்பு பிரதான குண்டத்தில் மஹாபூர்ணாகுதி வழங்கி ரக்ஷை எடுத்துக் கும்பத்திற்குச் சாத்தி அதனை அனைவருக்கும் வழங்குவர்.

**கும்ப உத்தாபனம்**

குறிக்கப்பட்ட சுபநேரத்தில் சகலவித தோஷங்களும் நிவர்த்தியாகும் பொருட்டு நவக்கிரகதானம், யாத்ராதானம் என்பன வழங்கியபின் பரிசாரகரை அலங்கரித்து அவரை வாகனமாகப் பாவித்து அவர் சிரசில் பிரதான கும்பத்தை வைத்து மங்கல வாத்தியங்கள் முழங்க ராஜோபசாரங்களுடன் வீதி வலமாக எழுந்தருளுவிப்பர்.

ஸ்தூபிக்கென அமைக்கப்பட்ட கும்பத்தையும் இதனோடு அல்லது முன்பே வலமாகக் கொண்டுவந்து முதலில் ஸ்தூபிக்கு அபிஷேகம் செய்வர்.

**கும்பாபிஷேகம்**

மங்கலவாத்தியங்களும், வேதகோஷங்களும் முழங்கப் பிரதான கும்பமும், அஷ்ட வித்யேஸ்வர கும்பங்களும் மூலமூர்த்திக்கு முன்னர் வைத்து நியாசங்கள் செய்யப்பட்டபின் அபிஷேகம் செய்யப்படும். மஹா ஹவிர் நிவேதனம் என்னும் விசேஷ நைவேத்தியத்தை நிவேதித்தபின் கதவைச் சாத்திவிடுவர்.

**தசதர்சனம்**

இதன்பின் பண்ணிசை நிகழ்த்திக் கதவினைத் திறந்து மங்கலப் பொருட்களான பசு, நிறைகுடம், தீபம், கண்ணாடி முதலியவற்றையும், சுமங்கலியையும், தரிசிக்கச் செய்வர். பின்பு தர்மகர்த்தாக்கள், உபயகாரர் முதலியவர்களுக்கு அபிஷேகம் நிகழும். (அவபிருத ஸ்நானம் என்று இதனைக் கூறுவர்)

**மஹாபிஷேகம்**

பஞ்சாமிர்தம், பால், இளநீர் முதலிய சகல பொருட்களாலும் மூலமூர்த்திக்கு அபிஷேகம் செய்து ஸ்நபனாபிஷேகம் செய்வது மஹாபிஷேகம் எனப்படும். இதன்பின் ஆசார்ய பூஜை நிகழும். சிவாசாரியார்களை உபசரித்து தக்ஷிணை தாம்பூலங்களை வழங்கி நமஸ்கரித்து அவர்களது ஆசி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதுடன் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நிறைவுபெறும். இரவு கல்யாண உற்சவம், திருவூஞ்சல் என்பன நிகழும்.

**மண்டலாபிஷேகம்**

கும்பாபிஷேகம் நிகழ்ந்த நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் கொண்ட ஒரு மண்டலத்துக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நிகழும். திரிபட்சம் (மூன்று பட்சங்கள் கொண்டது) ஒரு மண்டலம். ஒரு பட்சம் பதினைந்து நாள். எனவே நாற்பத்தைந்து நாட்களே மண்டலாபிஷேகத்திற்கு உரிய காலமாகும்.

**சங்காபிஷேகம்**

நாற்பத்தைந்தாம் நாள் சங்காபிஷேகம் நடைபெறும்.


பூஜைக்குரிய உபகரணங்களுள் சங்கு மிகத்தூய்மையானது. சங்கில் விடப்படும் நீர் புண்ணிய தீர்த்தத்திற்கு நிகராகிறது. நூற்றெட்டுச் சங்கினாலும் (அஷ்டோத்தர சதசங்கம்), ஆயிரத்தெட்டுச் சங்கினாலும் (அஷ்டோத்தர சஹஸ்ர சங்கம்) வசதிக்கேற்பச் சங்காபிஷேகம் நிகழும்.

பிரதான கும்பத்தில் வலம்புரிச்சங்கும் ஏனையவற்றிற்கு இடம்புரிச்சங்கும் உபயோகிக்கப்படும்.

**கோப்பாய் சிவம்**
**அவர்களின் நூலிலிருந்து**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புண்ணிய கும்பாபிஷேகத்தில் பங்குபற்றி கலந்து சிறப்பிக்கும் சிவாச்சார்யப் பெருமக்கள்



சிவஸ்ரீ ம.பாலச்சந்திரக்குருக்கள்
சட்டநாதர் கோயிலடி, நல்லூர்.



சிவஸ்ரீ இ.பாலச்சந்திரக்குருக்கள்
பிரதமகுரு, இளவாலை,
ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயம்.



சிவஸ்ரீ ச.சண்முகானந்தக்குருக்கள்
பிரதமகுரு,
சூராவத்தை அம்மன் கோயில்,ஏழாலை.



சிவஸ்ரீ சோ.வாகீஸ்வரக்குருக்கள்
பிரதமகுரு,
அருளானந்தப் பிள்ளையார் ஆலயம், கந்தரோடை.



சிவஸ்ரீ சி.பாலசண்முகக்குருக்கள்
கட்டுடை



சிவஸ்ரீ சோ.உமாரமணக்குருக்கள்
சட்டநாதர் கோவிலடி, நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்புண்ணிய கும்பாபிஷேகத்தில் பங்குபற்றி கலந்து சிறப்பிக்கும் சிவாச்சார்யப் பெருமக்கள்




சிவஸ்ரீ ப.சண்முகராஜக்குருக்கள்
பிரதமகுரு, பலானை கண்ணகை அம்மன் ஆலயம்,
கோப்பாய்.



சிவஸ்ரீ சு.முரளீதரக்குருக்கள்
சித்தி விநாயகர் கோவிலடி, அரியாலை.



சிவஸ்ரீ துரைச்சாமிக்குருக்கள்
மாவிட்டபுரம் கந்தசாமி கோவில்,



சிவஸ்ரீ சோ.அரவிந்தக்குருக்கள்
பிரதமகுரு, பரராஜசேகரப்பிள்ளையார் ஆலயம்,
இணுவில்.



சிவஸ்ரீ வ.உமாசுதக்குருக்கள்
பிரதமகுரு, மயிலணி கந்தசாமி கோயில்,
சுன்னாகம்.




சிவஸ்ரீ ச.சுகுமாரக்குருக்கள்
கல்வியங்காடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புண்ணிய கும்பாபிஷேகத்தில் பங்குபற்றி கலந்து சிறப்பிக்கும் சிவாச்சார்யப் பெருமக்கள்




சிவஸ்ரீ கா.குகானந்தக்குருக்கள்
முருகமூர்த்தி கோயிலடி, உடுவில்.




சிவஸ்ரீ மு. வைகுந்தவாசக்குருக்கள்
நல்லூர்



சிவஸ்ரீ வை.ஜெகதீஸ்வரக்குருக்கள்
கொண்டலடி வைரவர் கோயிலடி, நல்லூர்.



சிவஸ்ரீ சி.முத்துச்சாமிக்குருக்கள்
பிரதமகுரு, உடுவில் அம்மன் கோயில்



சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள்
பிரதமகுரு, உடுவில் அம்மன் கோயில்



சிவஸ்ரீ ச.மதுசூதனக் குருக்கள்
பிள்ளையார் கோயிலடி, சித்தன்கேணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புண்ணிய கும்பாபிஷேகத்தில் பங்குபற்றி கலந்து சிறப்பிக்கும்

சிவாச்சார்யப் பெருமக்கள்




சிவஸ்ரீ கு.சோமாஸ்கந்தக்குருக்கள்
பிரதமகுரு, சீரணி நாகபூசணி அம்பாள் ஆலயம்




சிவஸ்ரீ கு. உமாசங்கரக்குருக்கள்
கீரிமலை சிவன் தேவஸ்தானம்



சிவஸ்ரீ இரத்தினேஸ்வரக்குருக்கள்
தாவடி



சிவஸ்ரீ ச.பரமேஸ்வரக்குருக்கள்
அளவெட்டி



சிவஸ்ரீ க.சிவபாலக்குருக்கள்
கல்வியங்காடு



சிவஸ்ரீ கு.சரவணபவக்குருக்கள்
தெல்லிப்பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்புண்ணிய கும்பாபிஷேகத்தில் பங்குபற்றி கலந்து சிறப்பிக்கும் சிவாச்சார்யப் பெருமக்கள்



### பாக சாஸ்த்திர நிபுணர்

**பிரம்மஸ்ரீ முருகானந்தசர்மா**

யாழ்ப்பாணம்

### வேதபாராயணம்

**சிவஸ்ரீ பரமேஸ்வர தீட்சிதர் சிதம்பரம்**

இந்தியா

**சிவஸ்ரீ பா.முரளீதரக்குருக்கள்**

மீசாலை

### சர்வ சாதகர்கள்

பிரம்மஸ்ரீ சே.சிவபாலசர்மா (இணுவில்)
பிரம்மஸ்ரீ கு.ஆனந்தகுருசாமி சர்மா (கைலாச பிள்ளையார் கோயில், நல்லூர்)
பிரம்மஸ்ரீ ப.ராஜகோபாலசர்மா
பிரம்மஸ்ரீ சு.நவநீதகிருஷ்ணசர்மா (நீராவியடி)
பிரம்மஸ்ரீ கு. கணேசராஜசர்மா (உடுவில்)
சிவஸ்ரீ ம.தானுநாதக்குருக்கள் (இணுவில்)
சிவஸ்ரீ ம.சோமசுந்தரக்குருக்கள் (இணுவில்)
சிவஸ்ரீ ம.சீவச்ஸக்குருக்கள் (இணுவில்)
பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா (இணுவில்)
பிரம்மஸ்ரீ ப.முத்துக்குமாரசர்மா (இளவாலை)
பிரம்மஸ்ரீ ச.கௌரிசங்கரசர்மா (கோப்பாய்)
பிரம்மஸ்ரீ சி.கௌரிசங்கரசர்மா (இணுவில்)
பிரம்மஸ்ரீ ம.பாலகைலாசசர்மா (சுதுமலை)

இவர்கள் எல்லோரும் ஒருமித்து வேதங்களை ஓதியும் யாக பூஜைகள் ஸ்தோத்திரங்கள் இவைகளைப் படித்தும் ஆலயம் எங்கும் மந்திர ஒலியை பரவச் செய்து இறைசக்தியை ஆலயத்தில் பெருக தம்முடைய ஆத்ம சக்தியை பயன்படுத்துவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாக சம்ரட்சகர்கள்

இவர்கள் கும்பாபிஷேகத்திற்கு தேவையான ஆயத்தங்களைச் செய்து கிரியா காலங்களில் சிவாச்சார்யர்களோடு இணைந்து அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து கும்பாபிஷேகம் சிறப்புற தம் பணிகளைச் செய்வர்.

| | |
|---|---|
| பிரம்மஸ்ரீ நி.ஜோதீஸ்வரசர்மா | சங்குவேலி |
| பிரம்மஸ்ரீ இ.வாசுதேவசர்மா | மானிப்பாய் |
| பிரம்மஸ்ரீ ஜெ.ராஜீவசர்மா | கந்தரோடை |
| பிரம்மஸ்ரீ வா.வதனீசசர்மா | கந்தரோடை |
| பிரம்மஸ்ரீ இ.வாமதேவசர்மா | மானிப்பாய் |
| பிரம்மஸ்ரீ பா.சிவானுஜசர்மா | இளவாலை |
| பிரம்மஸ்ரீ பா.தரணீதரசர்மா | இளவாலை |
| பிரம்மஸ்ரீ மு.ஜெகன்நாதசர்மா | உடுவில் |
| பிரம்மஸ்ரீ நா.ஜனார்த்தனசர்மா | சுதுமலை |
| பிரம்மஸ்ரீ அ.மகேஸ்வரசர்மா | கொழும்புத்துறை |
| பிரம்மஸ்ரீ ச. சிறீதரசர்மா | கொக்குவில் |
| பிரம்மஸ்ரீ ச.ஜெகஜீவசர்மா | மயிலணி |
| பிரம்மஸ்ரீ ப.மகேந்திரசர்மா | பன்னாலை |
| பிரம்மஸ்ரீ ச.ரவிசங்கரசர்மா | கொழும்புத்துறை |
| பிரம்மஸ்ரீ நி.மங்களேஸ்வரசர்மா | சங்குவேலி |
| பிரம்மஸ்ரீ ஹரிஹரசர்மா | மருதனார்மடம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1925ம் ஆண்டு மானியம்பதி தா. சுவாமிநாதன் அவர்கள் எழுதிய மருதடி விநாயகர் ஆலய மான்மியம் என்னும் வரலாற்று நூல் அடியவர்களுக்காக தரப்பட்டுள்ளது**

உ

சிவமயம்.

# மருதடி விநாயகராலய மான்மியம்.

மானியம்பதி

தா. சுவாமிநாதன்

இயற்றியது.

சேர்வு இல. Sp. 2602.
வகுப்பு இல. 264

இஃது

மானிப்பாய் இந்துக்கல்லூரித் தமிழ்மொழி, வடமொழி ஆசிரியர்,

நீர்வேலிப் பண்டிதர் கோட்டம்,

ஸ்ரீமான். வ. சி. கந்தையபிள்ளையவர்களால்

மேற்பார்வையிடப்பட்டு,

யாழ்ப்பாணம்,

நாவலர் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப் பட்டது.

All Rights Reserved.

விலை சதம் 25.

இரத்தாக்ஷி ஞு

1925.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

இலங்காதீபத்திற்குச் சிரமென விளங்கும் எமது யாழ்ப்பாண மாநகரிற் பலவளங்களாலுஞ் செறிந்த மானியம்பதியிலே, தமதடியார்கள் இட்டசித்தி களைப் பெற்றீடேறுமாறு திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் கருணைக் கற்பகவள்ளலும், மெய்யன்பர்களுடைய அகக்கண்களுக்கு அருச்சுனம் அல்லது பூதவமென்று அழைக்கப்படும் மருத விருட்சத்தின் கீழ் வீற்றிருந்து தயிரின்கண் நெய்போல வியாபகமாய்த் தோற்றுகின்ற சச்சிதானந்தரூபியும், எமதூர்வாசிகளால் உவப்பாக 'மருதடி விநாயகர்" என அழைக்கப்படுபவருமாகிய கற்பக வினாயகக் கருணாநிதிப்பெருமானுடைய சரித்திரத்தைப் பற்றிப் பிறவூர்களிலிருந்துவரும் பிராமணர்கள், சிவதொண் டர்கள் பெருமானுடைய திருச்சன்னிதானத்தைத் தரிசனஞ்செய்யும் பொழுது கேட்டதுண்டு. உள்நாட்டிலுள்ள அனேகர் தாமும் கோயிலின் உற்பத்தி எக்காலத்திலென்றும், எக்காரணம் பற்றிக் கோயில் உற்பத்தியாயினதென்றும், எவர் முதல் ஆரம்பஞ் செய்தாரென்றும் அதிகமாக விளங்கினவரல்லர். இச்சம்பவங்களைக் கர்ணபரம்பரையாகச் சிலர் பேசிவருகின்றனர். யாமும் எமது ஊரார் பேசிவருங் கதைகளைக்கொண்டும், பெரியவர்கள் ஆதாரமாய்ச் சொல்லும் மொழிகளைக் கொண்டும், எமது புத்திக்குச் சரியெனத் தோற்றுமாறு, இவ்விநாயகமூர்த்தியைப் பிரார்த்தித்துச் சனங்கள் மனிதசீவியத்தின் பரமப் பிரயோசனத்தை அடை வதற்கு இம்மூர்த்தியின் அற்புதம் வாய்ந்த அருமைத் திவ்விய சரித்திரம் ஓர் கருவியாகவிருக்குமென்று நினைத்து இதைச்சுருக்க மாக எழுதுகிறோம். இதை வாசிக்கும் அறிவிற் சிறந்த சைவாபிமானிகள் யாவரேனும் இதிலேதாவது ஆட்சேபனை கூறுவாராயில், விக்கினேசுரனிற் கொண்ட அன்பின் காரணமாய் அவருடைய மகிமைகளை வியந்துகூறும் நோக்கம்பற்றி, எமது சிற்றறிவுக் கெட்டியவாறு வரையப்புகுந்தேமல்லாது வேறு சிந்தனையுடையேமல்லேமென்று நிச்சயமாக உத்தரம் புகல்வோம். இன்னும் எவராவது எமது சிற்றறி வுக்குப் பலப்படாத பலவழுக்கள் கண்டுபிடித்து அவற்றை எமக்குப் புலப்படச் செய்யின், இரண்டாம்பதிப்பைச் சுத்தி செய்வோம். இம்மான்மியத்தைச் செந்தமிழிலெழுதக் கற்பித்த குருமூர்த்திக்கே அர்ப்பணஞ் செய்கின்றோம்.

'நல்லார் பிறர்குற்றம் நாடார் நலந்தெரிந்து
கல்லா தவர்குற்றங் காண்பரோ - அல்லாத
என்போல்வார் என்னை இகழ்வரோ என்கவிக்குப்
பின்பாரோ காண்பார் பிழை"

**இங்ஙனம்**
**தா. சுவாமிநாதன்**
**மானியம்பதி,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

## மானிப்பாய், இந்துக் கல்லூரித் தலைமை ஆசிரியர், ஸ்ரீமான் வி. வீரசிங்கம் B.A. அவர்கள் எழுதியது

தரிசிப்பார் மனங்களைக் கவர்ந்து, பத்தியை வளர்த்த வேண்டுவார் வேண்டுவதை ஈயும் மருதடி விநாயகர் மான்மியத்தை தெள்ளிதில் யாவரும் வாசித்து இன்புறுமாறு எழுதப்பெற்ற இச்சிறு புத்தகம் எனக்கு அதிகம் சந்தோஷத்தை தந்தது. வாசிப்பவர் நல்வழிப்படும் நோக்கத்துடன் எழுதப் பட்ட இப்புத்தகமானது நாமனைவரும் பயன்படத்தக்க சரித்திர ஆராய்ச்சியை யுடையதாய் விளங்குகின்றது. தேசாபிமானத்தை வளர்ப்பதற்குச் சரித்திர ஆராய்ச்சி உசிதமான முயற்சியாம். மானியம்பதி வாசகரும், எமது கல்லூரிப் பழைய மாணவரிலொருவருமாகிய இதன் ஆக்கியோன், தான் இளமையிற் காட்டிய இதிகாசக் கல்வித் திறமைக்கும், தமிழ் இலக்கண இலக்கிய அறிவுக்கும், பாஷாபிமானத்திற்கும் ஏற்ப நூலை வெளியிட்டது வியந்து பின்பற்றத்தக்கதே. யாழ்ப்பாண நாட்டிலுள்ள வாலிபர் தங்கள் தங்கள் கிராம மக்களின் சரித்திரங்களை ஆராய்ந்து எழுதுவாராயின் தேசத்தின் தொண்டு செய்பவராவர். இப்புத்தகத்தை அன்புடனேற்று இதை ஆக்கியோனை உற்சாகப் படுத்துவது எங்கள் கடமை.

## யாழ்ப்பாணம், இந்துக் கல்லூரி ஆசிரியர், ஸ்ரீமான் பொ. சபாபதிப்பிள்ளை B.A.L.T அவர்கள் எழுதியது

யாழ்ப்பாண நாட்டில், அனேக வகையிற்றனக்கிணையில்லாது விளங்கு கின்ற மருதடி விநாயகர் ஆலயத்தில் அபிமானம் பூண்டோர், முதலில் மானிப்பாய் வாசிகளும், பின்னால் சுற்றுக் கிராமங்களிலுள்ளோரும், அதன் பின்னால் மற்றும் யாழ்ப்பாணிகளுமே. இத்தகைய அபிமானிகளாலேயே சைவசமயம் விருத்தியடையக் காத்திருக்கிறது. அபிமானத்தை அதிகப் படுத்தத்தக்கது மான்மியமும், சரித்திர வரலாறுமே, இனிப் பிறவியின் நோக்கம் மருதடி விநாயகர் மேல் அன்பு வளர்த்தலே, அதை வளர்ப்பதற்கு அப்பெருமான் மான்மியத்தையும் அவர் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தின் சரித்திர வரலாற்றையும் அறிதல் இன்றியமையாதது. தற்காலத்தில் அனேக வகையான லௌகீக முயற்சிகளில் ஈடுபட்டு இரவும் பகலும் உழைத்துவரும் மானுடர் கேள்வி மூலமாய் இத்திருப்பதியின் மான்மியத்தையும், சரித்திரவரலாற்றையும் உள்ளவாறு அறிந்து கொள்ளச் சாவகாசம் வாய்க்காது. இப்பெருங்குறையை நிறைவேற்றியருளிய ஸ்ரீமான் தா. சுவாமிநாதன் அவர்கட்கு அபிமானிகளும் பக்தர்களும் என்றும் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். இந்நூலின் சொற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவை பொருட்சுவைகளைக் கேட்டு வியந்தேன். ஆனந்தித்தேன், மனம் உருகப் பெற்றேன். வாசிப்பவர் கேட்பவர் மனதை அவ்வண்ணம் செய்யாதுவிடாது. தமிழையும் சைவமார்க்கத்தையும் அலட்சியம் செய்கின்ற இக்காலத்திலே, இவ்வாலிபர் இவ்வழியில் நின்று தமிழிலே பெரும் ஞானம் ஈட்டி, பரத்தில் அன்புபூத்து, தன்னையும் மகிழ்வித்து, பிறரையும் மகிழ்வித்ததை யாவரும் போற்றுவார்.

## யாழ்ப்பாணம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரித் தலைமையாசிரியர் ஸ்ரீமான் சு. சிவபாதசுந்தரம் B.A. அவர்கள் எழுதியது

நாடுகள் போலவே சிற்றூர்களும் கோயில்களும் அழகிய அரிய சரித்திரங்களையுடைய இவற்றுள் கோயில்களின் சரிதைகள் சமயப் பெருமை யையும், கடவுட் பக்தியையும் வளர்க்கத்தக்கவை. ஆதலால் மருதடி விநாயகராலயச் சரித்திரம் வெளிவரல் சைவசமயத்தவர்க்குப் பேருவகை யைத்தரும்.

இவ்வாலயத்தின் சரித்திரம் யாழ்ப்பாணத்துச் சரித்திரத்தைத் தொடர்ந்து வருகின்றது. தமிழர், பறங்கியர், ஒல்லாந்தர் ஆங்கிலேயர் ஆகிய நால்வகை யினரது ஆட்சிக் காலங்களில் அவ்வவ்வரசரால் வரத்தக்க இன்பதுன்பங்களை இக்கோயிலனுபவித்து வந்தமையும் எந்நாளிலும் இக்கோயிலில் விநாயகப் பெருமான் பேரருள் பாலித்து வந்தமையும் இந்நூலாற் பெறப்படுகின்றன. பல இடங்களிலும் சிதறிக்கிடந்த உண்மைகளைச் சேர்த்துத் தொடுத்த பெருமுயற்சி யும் இந்நூலால் அவைகள் நிலைபேறடைந்தமையும் பாராட்டப்படத்தக்கவை. இந்நூல் தலபுராணமாதலுமன்றி இனிய தமிழ்நூலுமாகின்றது. செந்தமிழுரை யோடு பொருத்தமான இடங்களிற் செய்யுள் விரவி நூலைச் சிறப்பிக்கின்றது. இதனை இயற்றியவராகிய ஸ்ரீமான் சுவாமிநாதபிள்ளையவர்கள் சைவத்துக்குந் தமிழுக்குந் தொண்டு செய்தனர்.

## ஆலயத்தின் தருமகர்த்தாவாய் விளங்கும் மானியம்பதி புரோக்கர் ஸ்ரீமான் நவரத்தினசிங்கம் சுவாமிநாதனவர்கள் எழுதியது

இப்புத்தகத்தை யாம் மிகுந்த பக்தியுடன் வாசித்து இன்புறுகின்றோம். இந்நூல் எமது குலதெய்வமாகிய விநாயகப் பெருமானிடத்தில் யாவருக்கும் பக்தியையும், அபிமானத்தையுமுண்டுபண்ணுமென்பது, நிச்சயம். விநாயக ருடைய மான்மியமும் அப்பெருமான் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தின் வரலாறும் எமது முன்னோர் பெருமானுக்குச் செய்த தொண்டுகளும் செந்தமிழி லெழுதப்பெற்றிருத்தலைக் கண்டு மகிழ்ந்தோம். இந்நூலை அங்கீகரிக்கும் சகலரும் விநாயகர் அருளைப் பெறுபவராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம், இந்துக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் ஆ.மு. சோமாஸ்கந்தபிள்ளை அவர்கள் சொல்லியவை


தென்றிசையிற் கயிலையெனச் சிறந்து தோன்றுந்
திருக்கோணமாமலையுஞ் சிவனார்தேவி
மன்றலமர் மாதோட்டமருவும் வாச
மலர்ச்சோலைத் திருக்கே தீச்சரமும்மாய
னன்றரக்கனழிவெய் தவமைத்தசேதி
நருக்கரையு மறுமுகனார மருஞ்சோதி
வென்றிவரைக் கதிர்காம முடனேவேலை
மேதினியின்மிக்க தலம் விளங்குமீழம். 01

செந்தமிழ்வாழீழ வளநாட்டின் றெய்வச்
செழுந்திலகமென் வடபாற்சேர்ந்தே யோங்கும்
அந்தமிலாவருமறையா கமங்களாயும்
அந்தணர்வாழ் யாழ்ப்பாண மமருமாங்கே
மந்தமாருதம் வீசுமலர்ப் பூஞ்சோலை
மானிநகர் மருதடி வாழ்மாதங்கற்குச்
சந்தமுள சரித்திரம்பாவுடனே தந்தான்
சார்புணர்ந்துசார் பறியுந் தமிழ்வலோனே. 02

அன்னவனையாவனெனினறை துங்கேண்மோ
அரனடியைய நுதினமுமருச்சித்தேத்தும்
முன்னவர்கள் காராள சிங்கமென்னும்
முதலிவழிமுறைவந்தமூ துணர்ந்தோர்
தன்வென்றாமோ தான்றான் றவத்திற்றந்த
தகைமை பெறுதனிப்புதல்வன் சாமிநாதன்
மன்னுகலைமுறை தெரிந்த மாண்புமுள்ளோன்
மானிநகர்வேளாளர்மகிபன்றானே. 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







ஓம்

வேத முதல்வனரன் மெய்ப்புதல்வ னைங்கரத்து
நாதன்மா னிப்பாய் நகர்த்தலைவன்—சீத
மருதடிவா ழையன் மலரடிகள் போற்றி
லிருமைப் பயனுமெய்து மே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதடி விநாயகராலய மான்மியம்

## விநாயகர் துதி

மின்னும் மருதடி வாழ் வேழமுகன் றாள்பணிந்து
பன்னுமவன் காதை பகர்ந்திடவே - மன்னுபுகழ்
நீட்டு மலைமேல் றிகழ்பா ரதம்வரைந்த
கோட்டுமுகன் பாதங் குறி

## நாமகள் துதி

விக்கினங்கள் நீக்க மருதடியில் வேழமுகன்
புக்ககதை யாவும் புகலவே - மிக்கபுகழ்
வன்னமே வுங்கமல மாமலர்மேல் வீற்றிருக்கும்
அன்னமே முன்னின் றருள்

**மகான் அடக்கம்**

ஸ்ரீஅகண்டாகார சச்சிதானந்த கயமுக சொரூபமாய் விளங்காநின்ற விநாயகமூர்த்தியின் திருவடிப்பேறெய்திய சித்தவான்களே! ஓர் அந்தகனாகிய யாழ்ப்பாடிக்குப் பரிசளிக்கப்பட்ட எமது யாழ்ப்பாண நாடு பூகோள படத்தில் கடுகுப்பிரமாணமாய்த் தோன்றினும் அதின் பூர்வீக சரித்திரத்தை நோக்கும் போது பெரிய தேசங்களின் சரித்திரங்களோடு வைத்து நோக்கத்தக்க பெருமை யுடையதாயிருக்கின்றது. இத்துணைச் சிறந்த யாழ்ப்பாண வாசு தொடங்கிய காலந்தொட்டு ஆயிரத்து ஐந்நூறு வருடம் வரையிற் சுதேசவசு நடந்தது. இவ்வூரை ஆண்ட பேர்பெற்ற தமிழரசரெல்லாம் சைவசமயத்தைச் சிரமேற் கொண்டு சிவாலய மடாலய வித்தியாலயங்களைத் தாபித்துத் தேசத்திலே சைவ சமயத்தின் மகத்துவங்களை நாட்டுவாராயினர். மேற்படியரசர் காலத்திலே திரிகோ, திருக்கேதீச்சரம், நகுலேசர்மலை என்னும் புண்ணிய ஸ்தலங்களைத் தரிசிக்கும் பொருட்டு வடநாட்டிலிருந்து அனேகந் துறவிகள், தவசிரேட்டர்கள் ஞானிகள், சித்தர்கள் முதலானோர் வந்து யாழ்ப்பாண நாட்டிற்றங்குவாராயினர், எம்மூர் வாசிகளிலுமனேகர் ஆத்ம வளர்ச்சியின் பொருட்டு யோகசித்தி ஞான சித்திகள் பெற்றவராய்த் தாழ்ந்த சிந்தனைகளுக்கு மனத்திலிடங்கொடாத வராய்க் கடவுளையே தமது ஆன்மநாயகராகக் கொண்டு முத்திப் பேற்றினைப் பெற்றவர்களாயினர், இப்படியே ஓர் தவசிரேஷ்டரானவர், மானியம்பதி மருதடி விக்கினேசுரன் தற்போது திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ப்பக்கிருகமண்டபத்தைஸ்தானமாய்க்கொண்டு, விநாயகரைச்சற்குருவாய்ச் சிந்தித்து, ஞானசாதனங்களை அப்பியசித்து, மனம், புத்தி, சித்தம், அகங்காரங் களை ஒருவழிப்படுத்தி ஏகாக்கிரசித்தமாய்,

"ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்க ணான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையா னாடுமா னந்த
எல்லையி றனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட்டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்"

என்ற சேக்கிழார் சுவாமிகள் திருவாக்காகிய பெரிய புராணத்திற் கூறிய வாறு நிஷ்டையிலிருந்தாரென்று அறிகிறோம். இதுவேயன்றி இக்கோயிலைத் தரிசிக்கும் பிறவூர்க் கற்றறிந்த புலவர்களும் யோகாப்பியாசத்திலே தேர்ச்சியுற்ற மகாத்துமாக்களும் தங்கள் அனுபவ முறையைக்கொண்டு இவ்விடத்திலோர் மகான் அடக்கமிருக்க வேண்டுமென்று கூறுகின்றனர். ஆகையினாற் பின்னாற் சொல்லப்படும் சரித்திர ஆதாரத்தைக் கொண்டு முற்கூறிய வண்ணம் ஓர் மகான் தமிழரசர் பிற்காலத்திலும், பறங்கியர் யாழ்ப்பாணத்தைத் தம்வயப்படுத்திய சொற்பகாலங்களுக்கு முன்னருமாய் இவ்விடத்திலிருந்துள்ளாரென்று திடப் படுத்திக்கொண்டோம்.

இன்னும் தமிழரசர் காலத்தில் இவ்விடத்தில் விநாயகர் ஆலயமிருந் திருக்கிறதென்றும் இருந்த காலத்திலேயே மகான் இங்கே நிஷ்டையிலிருந்தா ரென்றும் பின் பறங்கியர் காலத்தில் ஆலயமிடிபட்டதென்றும் இதற்கு ஆதாரமாக ஆலயத்தின் தெற்கு வீதியிலுள்ள திருக்குளத்தை (இவ்வாலயம் கட்டப்படு முன்னும்) "பிள்ளையார் குளம்" என்று சனங்கள் அழைத்துவந்தார்களென்றும் கூறுவாருமுளர். இது நிற்க மனதை ஒருவழிப்படுத்தி யோகசாதனை செய்வதற்கு வாய்த்த இடம் எப்பொழுதும் ஏகாந்தமான இடமேயாகும். தங்களைச் சுற்றி யிருக்கும் இயற்கைப் பொருட்களின் மூலமாய்ப் புதிய அழகுகள் வெளிப்பட அவைகள் மூலமாகப் பிரகாசித்து விளங்குகின்ற சித்தாகாசரான இறைவனை ஏகாந்தமாய்க்கொண்டு களிப்பதற்கு யோகிகள் ஆறுகள், மலைகளினோரங் களிலும் அடர்ந்த செடிகளின் கீழும் இருந்தார்களென்பதைப் புராண இதிகாசங்கள் மூலமாய் அறிகின்றோம். மருதடியிலமர்ந்த மகானும் யோகாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பியாசத்திற்கு இயற்கையில் இலட்சணங்களமைந்துள்ள இடத்தையே நாடினர். இவ்விடத்தில் "மருதஞ்சோலை" என்று அழைக்கத்தக்கதாய்ப் பூதவமரங்கள் அடர்ந்தோங்கி வளர்ந்திருந்தன. இம்மரம் இயற்கையிலே ஓர் அழகுவாய்ந்த தென்றும் "இயற்கைப் பொருளானது இறைவனைத் தெரிவிக்கின்றது" என்ற படி இம்மரங்களில் இறைவன் பிரதிவிம்பமாயிருக்கின்றாரென்றும் விநாயகரில் அன்புபூண்டவர்கள் சொல்வர். மேற்படி மகானுபாவர் மருதமரங்களின் கீழேயிருந்து,

"ஆசினான் மறைப்படியு மெண்ணில் கோடி யாகமத்தின்படியுமெழுத் தைந்துங் கூறிப், பூசினான் வடிவமெலாம் விபூதியாலப் பூதியினைப் புரிந்தசடைப் புரத்தே சேர்த்தான், றேசினா லப்பொருப்பின் சிகா மேவுஞ் சிவனிவனே போலு மெனத் தேவரெல்லாம், பேசினார் வரிசிலைத்தை விசயன் பூண்ட பெருந் தவத்தினிலை சிலர்க்குப் பேசலாமோ"

என்ற பாரதகவிக்கேற்ப, விக்கினேசுரன் தியானத்திலேயிருந்து

"தன்னையுந் தனக்கா தாரத் தலைவனை யுங்கண் டானேற்
பின்னையக் கலைவன் றானாய்ப் பிரமமாய்ப் பிறப்பத்தீர்வன்"

என்பதற்கிணங்க அவ்விடத்திலே சமாதியாய் விட்டாரென்று அறிகிறோம்.

"காடுங் கரையு மனக்குரங்கு கால்விட் டோட வதன்பிறகே
ஓடுந் தொழிலாற் பயனுளதோ வொன்றாய்ப் பலவா யுயிர்க்குயி
ஆடுங் கருணைப் பரஞ்சோதி யருளைப் பெறுதற் கன்புநிலை (ராய்
தேடும்பருவ மிதுகண்டீர் சேர வாருஞ் செகத்தீரே"

**போர்த்துக்கேயர் காலம்**

விக்கினேசுரப் பெருமானது திருவடித் தாமரை மலர்களை வணங்கும் புண்ணியோத்தமர்களே! மேற்படி மகான் சமாதியடைந்த காலத்தில் உன்னத விசித்திர கோபுரங்களோடும் மதில்களோடும் விளங்கின. யாழ்ப்பாண நாட்டின் கண் சுமார் ஆயிரத்தைந்நூறு வருஷம் தமிழரசர்கள் பெருநிதிகொண்டு பாது காத்துவந்த சைவாலயங்களையெல்லாங் கைசிறிதுங் கூசாது தகர்த்துவிட்ட பறங்கியரசர் காலந்தொடங்கியது. இவர்கள் கிராமங்கள் தோறுமிருந்த கோயில் களையெல்லாமிடித்து அங்கிருந்த விலையுயர்ந்த விக்கிரகங்களையும், திருவாபரணங்களையும் கொள்ளை கொண்டார்கள். இவ்வகையாய் இடிபட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களில், தமிழரசர் காலத்திலும், மகான் சமாதியடைந்த காலத்திலும் மருதடியிலிருந்த "விநாயகர் ஆலயமும்" ஒன்று என்று கூறுவர். பறங்கியர் இக்கோயிலையிடித்து இவ்விடத்தைச் சவக்காலையாக்கிவிட்டனர். இதற்கு ஓர் ஆதாரம் இப்பொழுது இருக்கும் ஆலயக்கட்டடம் ஆரம்பஞ் செய்த நாட் களில் இவ்விடத்தில் மனுஷருடைய என்புகள் காணப்பட்டனவென்று தக்க பெரியோர்கள் வாயிலாக அறிகின்றோம். சவக்காலையும் மயானமும் இப்போது கோயிலிலிருந்து ஏறக்குறைய நூற்றிருபத்தைத்து யாருக்கப்பால் ஆலயத்தின் மேற்கு வாசலின் நேர்திசையிலிருப்பதாலும், இது உண்மையெனத் தெரிகிறது. இது நிற்க, பறங்கியர் சைவசமய மணம் கொஞ்சமுமில்லாது, பிராமணரையும் தம்முடைய மதத்தைத் தழுவும்படி செய்துவந்த நாட்களில், அவர்கள் தண்டத்திற்கஞ்சி அகத்தே சைவராகவும் புறத்தே கிறிஸ்தவர்களாகவும் நடித்த பல சனங்கள், மகான் சமாதியடைந்த இடமும், இப்பொழுது மூலஸ்தானத் திற்குக் கிழக்கிலிருப்பதுமாகிய மருதமரத்தின் கீழ் இராக்காலங்களிலும், பறங்கியர் கண்களுக்குப் புலப்படாத நேரங்களிலும் பொங்கலிட்டுக் கற்பூர மெரித்து விநாயகரை வழிபட்டு வந்தார்கள். காலஞ்செல்லச்செல்ல இவ்வேலை இவ்விடத்து நின்ற பல மருதமரங்களிலொன்றின் கீழ் நடந்து வந்தது. இதற்கு ஓர் ஆதாரம் இப்பொழுதும் மூலஸ்தானத்திற்கு அருகாமையிலுள்ள மருதமரத்திலும், வெளிவீதியில் நிற்கின்ற மருதமரங்களில் கீழும், சனங்கள் உற்சவ காலங்களிலே கற்பூரமெரித்து, மருதத்தளிரைப் பறித்துக் கண்ணி லொற்றிக் காதில் அல்லது தலையில் அணிந்து கொள்ளுவதைக் காணலாம். பொங்கல் நாள்வீதம் நடத்தப்பட்டு வருகின்றது. தீவுப்பற்றிலுள்ள சனங்களும் யாழ்ப்பாணத்தில் எந்தப் பாகங்களிலுள்ளவர்களும் வேளாண்மையறுப்புக் காலங்களில் முதலெடுக்கும் நெற்றானியத்தை, "மருதடிப்பிள்ளையாருக்குப் பொங்கலுக்கு" என்று சொல்லியெடுத்து வைப்பது வழக்கம். இப்படிப் பறங்கியர் காலத்தில் பொங்கல் வணக்கம் முதலியன மறைபொருளாய் நடந்துவர எல்லாம்வல்ல விக்கினேசுரப் பெருமான் பொறுத்திருப்பாரோ! பறங்கியரின் கொடுங்கோன்மையை நாற்பது வருஷத்தில் நின்றுவிட செய்து யாழ்ப்பாண வரசை ஒல்லாந்தர் கையிற்செல்லவிட்டால் மெய்யன்பர் உள்ளமுருகப் பார்த்திருக்கச் சகியாமல் திருப்பள்ளி கொண்டெழுந்தருளத் தீர்மானித்தனர் போலும்!

"பெற்றவடகே தெரியுமந்த வருத்தம் பிள்ளை
பெறாப்பேதை யறிவாளோ பேரா னந்தம்
உற்றவர்க்கே கண்ணீர்கம் பலையுண் டாகும்
உறாதவரே கன்னெஞ்ச முடையா ராவார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய உற்பத்தி

மருதடியான் திருவடி நீழலிற்றங்கும் அடியவர் சிரேஷ்டர்களே! ஒல்லாந்தரசு தொடங்கிச் சிலகாலம் வரையில் பொங்கல் வணக்கங்கள் மேற்படி மருதடியில் விசேடமாயும் பெரும் பொருளாயும் நடந்து வந்தன. ஒல்லாந்தர் மார்க்க விஷயத்தில் அதிகம் ஊக்கஞ் செலுத்தாமல், பெரும்பொருளீட்டும் நோக்கமாய் வியாபாரத்திற் கவனம் செலுத்தினார்கள், இதை இவர்கள் பறங்கியரைப்போல அதிகம் மதப்பித்தம் பிடித்தவர்களல்லர். இவர்கள் காலத்திலே தொண்டை மண்டலத்தில் நடந்த ஓர் இராச கலகத்திற் கஞ்சி அனேக வேளாண் குடும்பத்தவர் புறப்பட்டு வந்து வட்டுக்கோட்டை, காரைநகர் முதலிய இடங்களிற் குடியேறினர். இவர்களில் ஓர் பிரமசரிய ஒழுக்கம் பூண்ட தியாகராசக் குருக்களென்பவர் தனிமையாய் வந்தமையால் நவாலி வயல்களிலிருக்கும் தூக்கிணி வைரவர் கோயிலடியில் வந்து தங்க நேரிட்டது. இவர் சைவமுதலி வேளாண் குடும்பத்தைச் சேர்ந்தவராகையால்,

“புலைகளுடன் கொலைகளவு கட்கா மத்தைப்
புந்திதனிற் கருதாம னிற்பீ ராயின்
மலைமகளோர் பாகனுங்கள் வசமாய் நிற்பர்
மாதவமும் பலிக்குமிந்த வழிநில் லார்க்கு
அலைகடலிற் றுரும்பதுபோன் மனந்தள் ளாடு
மறிவுதனக் கானிவரு மதுவல் லாமல்
நிலையான வெகுபிறப்பு நீங்கா தென்றே
நீணிலத்தி லருமறைக ணிகழ்த்து மாறே”

என்ற கவிக்கேற்பச் சைவசித்தாந்தம் முற்றும் கற்றுணர்ந்தவராய்ச் சமயாபிமானமுள்ளவராயினார். மானம், கல்வி, தயை, இன்சொல் சிவபக்தி முதலிய குணங்கள் வாய்த்தவரென்பது இவர் சந்ததியாரில் இப்போது நன்கு விளங்குகின்றது. இத்தூக்கிணி வைரவர் கோயிலிலிருந்து ஒரு வருஷம் வரையிற் சிவபூசை வணக்கஞ் செய்துவரும் நாட்களில் வருடந்தோறும் நடந்து வரும் வைரவமடையும், வேள்வியுங் கிட்டிவந்தன. பெரியவர் இக்கோயிலிற் பெருந்தொகை ஆடுகள் வெட்டப்படுமென்று கேள்விப்பட்டார். “ஐயோ, என்ன பரிதாபமான காட்சி! கடவுள் கொடுத்த தனுகாணாதிகளை அழித்துக் கடவுளைத் திருப்தி செய்வதா! கொலைத்தொழில் புரிவோர் ஆட்டை வெட்டும்பொழுது அவ்வுடம்பையுடைய ஆன்மாவின் கதியென்னே! “கொன்றனை யனைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைத்து நினைக்கொன்றன" என ஆன்றோர் வாக்குப்படி கொலைஞனும் மாணாந்தத்தில் அம்மிருகப் பிறவியைப் பெற்று அது அனுபவித்த துன்பத்தை அனுபவிப்பானல்லவா? இக்கோயிலதிகாரியும் பூசகரும் வழிபடுவோர்களும் கொலைபுரிபவரும் எச்சமயத்தவர்களோ? எக்கதியையடைய விரும்புகின்றார் களோ? அறிகிலேம்" என்று தமக்குள்ளே பிரலாபித்துப் பெரியவர் அவ்விடம் விட்டு நீங்கிக் கீழ்த்திசை நோக்கிச் சென்று மானிநகரிலுள்ள மருதஞ் சோலையை அடைந்தார். இச்சோலைக்கு அணித்தாயுள்ள காணிகள் மானியம்பதி சுவாமிநாத முதலியாருக்குரியது. மருத மரங்கள் நின்ற நிலமும் பக்கத்திலுள்ள குளமும் "முக்கோணதிடரும் பிள்ளையார் குளமும்" எனப் பெயர் வழங்கலாயிற்று. இவ்விடம் சமய சம்பந்தமான வழிபாட்டுக்குரிய புண்ணிய தோற்றத்தையுடையதாயிருந்தது பற்றிப் பெரியவர் இங்கே தங்கியிருப்பதற்கு ஆவல்கொண்டு அதற்குரிய வசதியேற்பாடுகள் செய்யும்படி மேற்படி முதலி யாரிடம் வேண்டினார். அவர் அவ்வேளையில் இராச உத்தியோகம் வகித்திருந்த வராகையால் அரசாட்சி யாருக்குரிய "முக்கோணதிடர்" என்னும் நிலத்தை அவர் களிடம் பெற்றுத் தியாகராசக் குருக்களை அதிலமர்த்தினார். இந்நிலத்திலேயே இரண்டு பனைகளும் ஓர் வேப்பமரமும் நிற்க அவைகளை வெட்டி ஒரு சிறு வீடு கட்டிச் சீவித்திருந்தார். இருந்துவரும் நாட்களில் இவ்விடத்தில் அனேக சனங்கள் பொங்கல் வணக்கஞ்செய்து வந்தார்கள். அங்ஙனம் அவர்கள் செய்துவரும் உற்சாகத்தைக் கண்டு அன்பர்கள் உய்யுமாறு ஓர் விநாயகர் சிலையை வைத்துப் பூசாக்கிரமங்கள் செய்து வந்தார். செய்துவரும் நாட்களில் ஒல்லாந்தர் பறங்கியரைப்போல மத ஸ்தாபனஞ் செய்யாது குடிகளாயுள்ள வர்கள் வலிந்துபோய்ச் சேர்ந்து கிறிஸ்தவர்களாகும்படி (அற்பகுற்றஞ் செய்த வழியும்) கொலைத் தண்டங் கற்பித்தல், கிறிஸ்தவ பாடசாலைகள் வைத்தல், கிறிஸ்தவர்களுக்குப் பட்டமளித்தல், உயர்ந்த உத்தியோகங் கொடுத்தல் ஆகிய கிரியைகளினால் அனேகரைத் தம்மதப்படுத்தினர். எம் சுவாமிநாத முதலியாரும் மார்க்க விஷயத்தில் ஒல்லாந்தரோடு இணங்கி நடந்தனர் போலும்! ஏனெனில் மானிநகரில்.கிறிஸ்தவமத ஊழியம் நடாத்திய ஒல்லாந்த பாதிரிமாருக்கு உவப்பாயிருக்குமென்றெண்ணி விநாயகர் சிலையை இவ்விடம் விட்டு நீக்கிவிட்டார். தமக்கும் பிறர்க்கும் ஆன்மாக்கள் ஈடேறும்படி பிரயோசன மாயிருந்த விநாயகரது உருவத்திருமேனி எடுபட்டதேயென்று மனத்துயரத்தி லாழ்ந்து "ஓ விக்கினேசுரனே! அங்குசபாசமேந்தி! அம்பிகைதனயா! முன்னோனே! மூத்தோனே! ஐங்கரனே! ஒற்றை மருப்பினனே! ஏரம்பா! கங்கை பெற்றோனே! முக்கண்ணா! கணபதியே! ஈசன்மைந்தா! கயமுகனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகுவாகனனே! என் செய்வேன்! உம்மைத் தஞ்சமென்றிருக்கும் மெய்யன்பர்கள் தேவரீரில்லாமல் உய்வதெப்படி! மருதமரத் தோனே! எமக்கு உமது திருவருளைப் புரிந்திடும்" என்று பலவாறாய்ப் பிரலாபித்துவரும் நாட்களில் ஓர் இரவில் விநாயகர், குருவுக்குத் தரிசனங் கொடுத்து, "அன்ப! வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் வீதியில் வசிக்கும் வைத்தியலிங்கச் செட்டியிடம் சென்று எனது உருவத் திருமேனியமைந்த சிலையைக் கேட்பாயேலுனது மனத்துயரம் நீங்கும்" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார். அதே நேரத்தில் வைத்தியலிங்கச் செட்டியாருக்கும் பெருமான் காட்சிகொடுத்து, "எனதன்பன் தியாகராசன் உன்னிடம் வேண்டும் காரியத்தை மறுக்காமல் கொடுத்துவிடு" என்று சொல்லி மறைந்தனர். மறுநாள் உதயமானதும் குருமணியானவர் குறிக்கப்பட்ட செட்டியாரிடம் சென்றார். அவ்வேளையில் மருதடி விநாயகர் பெருமையை இருவரும் நெடுநேரம் கலந்து பேசிக்கொண்டு ஈற்றில் செட்டியார் பசும்பொன்னையொத்த திருமேனியையுடைய ஓர் திருவுருவத்தைக் குருவிடம் வழங்கினார். அப்பால் மருதடியில் விநாயகமூர்த்தியின் நித்திய நைமித்தியங்கள் ஒழுங்காய் நடந்து வந்தன. சுவாமிநாத முதலியார் விநாயகரருளால் தான் செய்தது பிழையென உணர்ந்து திரும்பவும் விநாயகர் சிலையைக் குருவிடங் கொடுத்துவிட்டார். இந்தத் திருவுருவம் இப்பொழுது ஆலயத்திலிருக்குஞ் சிவன்கோயிலுக்கு மேற்கே வைக்கப்பட்டுப் பூசை செய்யப்படுகின்றது. இச்சிலையைத் தியாகராசர் முக்கோணதிடரென்னும் நிலத்திற் கணித்தாயுள்ள ஓர் கிணற்றிலிருந்தெடுத்தாரென்றும் அதைப் பறங்கியர் காலத்திற் பிராமணர்கள் கிணற்றிற் புதைத்துவிட்டார்களென்றும், ஆகையால் மருதடியிலாலயம் தமிழரசர் காலத்திலிருந்திருக்கிறதென்றும் பெரியோர் சொல்வர். செட்டியார் வழங்கிய திருவுருவம் மகாமண்டபத்தில் வைக்கப்பட்டுக் காவடிப் பாலபிஷேகம் பண்ணப்பட்டு வருகின்றது. இது நிற்கத் தியாகராசா மருதமரத்தின் கீழ்த் திசையில் விநாயகர் சிலையை வைத்துப் பூசை செய்துவரும் நாட்களில், திருக்கோயில்கட்டி மகோற்சவம் நடாத்த உத்தேசித்தார். உத்தேசித்து விநாயகர் அருளை முன்னிட்டுச் சுவாமிநாத முதலியார் உதவியைக்கொண்டு மருதமரத்தின் மேற்குத் திசையை நோக்கிக் கர்ப்பக்கிருகமும், அர்த்த மண்டபமும் கட்டிமுடித்து, எஞ்சிய கோயிற் பாகங்களை மரத்தடிகளாலுருவாக்கிப் பங்குனி மாதத்தில் மகோற்சவ ஆரம்பம் செய்வித்து, இருபத்துநான்கு நாட்களாய் விசேஷ விழாக் கொண்டாடிச் சித்திரை மாதம் முதலாந்தேதியிற் புதுவருஷம் ஆரம்பமாகும் வேளையில் இரதோற்சவமும், அடுத்தநாள் தீர்த்தோற்சவமும் நடாத்தி வந்தார். கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குத் திசையாக மாற்றவேண்டியிருந்தது, கீழ்த் திசையிலிருந்தால் உற்சவம் நடாத்தப் போதிய இடம் இல்லாதிருந்ததும், வீரகத்தி விநாயகரையமர்த்திக் கும்பாபிஷேகஞ் செய்யவேண்டியிருந்ததுமே போதிய நியாயங்களாடும், ஆலயம் உற்பத்தியான காலங்களில் ஒல்லாந்தவரசு முடிந்து ஆங்கிலேயர் காலமுதயமாகிவிட்டது.

மெய்வைத்த சமயங்கள் பலவற்றின் மிகவுயர்ந்த வேதநூலின், கைவைத்த சைவமதங் காட்டுமுதற் பிரணவமே கருதியன்பிற், தெய்வத்தன் மைகள் வாய்ந்த .திருமேனி மருதடியிற் சிறந்துதோன்றி, உய்வைத்தந் தருளுதற்கங்குயருறுபூங் கோயிலொன்றை யுஞற்றினாரால்.

## திருப்பணி வேலைகள்

அஷ்டசித்திகளையும் அருளும் ஆகுவாகனன் அடியவர்களே! ஆங்கிலேயர் காலம் உதயமானதும் அதிகாலையிற் கதிரவன் உதயமாகும் பொழுது புஷ்பங்கள் மலருமாறுபோல் (மதப் பைத்தியங்கொண்ட பறங்கிக்கார ராலும் ஒல்லாந்தராலுங் கொடிய தண்டங்களை அனுபவித்த) எமது யாழ்ப்பாண மாது ஈன்ற புத்திர இரத்தினங்கள் சமய சுயாதீனம் பெற்று முகமலர்ந்தார்கள். ஆங்கிலேயர் காலத்தில் மருதடியாலயம் அதி உன்னத மகத்துவ மேம்பாடுள்ள நிலைக்குக் கொண்டுவரப்பட்டது. கோயிற்றிருப்பணி வேலைகள் தர்மசீலராயும், விநாயகரடியவராயும் விளங்கின. பெரியவர்களுடைய பரோபகாரங்களினால் நடைபெற்றன. விநாயகரின் கர்ப்பக்கிருக தூபியும், அர்த்தமண்டபமும், மகா மண்டபமும் ஸ்ரீமான் பொன்னம்பலச் சிறாப்பரவர்களாலும், சபா மண்டபம் ஸ்ரீமான் மண்டலத்தாரவர்களாலும், ஸ்தம்பமண்டபம் ஸ்ரீமான் இரகுநாத முதலியார் சின்னத்தம்பியாரவர்களாலும், சிவன்கோயில், நடராசர் கோயில், அம்மன்கோயில்கள் ஸ்ரீமான் தன்மாவரதர் முத்துத்தம்பியவர்களாலும், முற்கோபுரம் ஸ்ரீமான் தம்பையா முதலியவர்களாலும், மடைப்பள்ளி, வாகன மண்டபம், தெற்கு மானியம்பதி ஸ்ரீமான் மருதப்பரவர்களாலும், வசந்த மண்டபம் வைரவி ஆசாரியாலும், வசந்த மண்டபக் கொட்டகை வட்டு நகரிலுள்ள சில புண்ணியவான்களாலும், தேர்முட்டியும், இரதமும் ஸ்ரீமான் இரகுநாதமுதலியார் சின்னத்தம்பியாரவர்களாலுஞ் செய்விக்கப்பட்டன. பின்பு கீழைக்கோபுரம் ஸ்ரீமான் செல்லப்பா வயிரமுத்து அவர்களாலும், பொங்கல் மண்டபக்கொட்டகை ஸ்ரீமான் வன்னியசிங்கம் தம்பிப்பிள்ளையவர்களாலும், திருநந்தனவனம் ஸ்ரீமான் ம.சிவப்பிரகாசமவர்களாலும், திருமஞ்சனக்கிணறு புதிதாய் ஸ்ரீமான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகேசமுதலியார் பொன்னுச்சாமியவர்களாலும், தீர்த்தக்கிணறு ஸ்ரீமான் முருகேசர் வினாசித்தம்பியவர்களாலும் உண்டாக்கப்பட்டன. தீர்த்தக் கிணற்றுக்குத் தெற்குத்திசையிலே சாமி தீர்த்தமாடுவதற்கு ஓர் தீர்த்த மண்டபம் ஸ்ரீமான் வல்லிபுரம் கனகசபையவர்களாற் கட்ட ஆரம்பஞ் செய்யப்பட்டிருக் கின்றது. இவைகளைவிட அனேகம் பெரியோர்கள் அனேகம் வேலை களைச் செய்வித்து ஆலயத்தை மேன்மைப்படுத்தினர். இப்பொழுதும் புண்ணி யோத்தமர்கள் சில வேலைகளைச் செய்வித்து வருகிறார்கள். விநாயகருக்குத் திருமஞ்சம் ஸ்ரீமான் வினாசித்தம்பி கணபதிப்பிள்ளையின் புத்திரர்களாற் செய்யப்படுகின்றது. இத்திருப்பணி வேலைகளைப் பெரியவர்கள் ஒவ்வோர் காரணம் பற்றிச் செய்வித்தார்கள். அதாவது, விநாயகருடைய விசேஷ வரப்பிரசாதங்கள் பெற்றுய்வதற்கே இவைகள் நடந்தன. உதாரணமாக ஸ்ரீமான் இரகுநாதமுதலியார் சின்னத்தம்பியாரவர்கள் ஒருமுறை கொடிய விஷந் தீண்டப்பெற்று அவ்விஷம் சிகிச்சைக்கு மேற்கொண்டதால், அவர் அரியமாதா விநாயகருக்கு இரதஞ் செய்துவைப்பதாகப் பிரார்த்தனை செய்ததாகவும், அங்ஙனம் பிரார்த்தனை செய்ததன்மேல் அக்கொடிய விஷம் நீங்கி அவர் சுகம் பெற்றதாகவும் அறிகிறோம். பெரும்பாலும் திருப்பணிகள் இவ்வகையாய் நடந்தன. அவைகளை விரித்துரைக்கில் எமது நூல் கொள்ளாது.

சங்கரனார் பெற்றபிள்ளை சங்கரிக்கு மூத்தபிள்ளை
மங்குல்வண்ண னுக்குகந்த மாப்பிள்ளை - பொங்கியெழும்
அப்பமவல் மோதகந்தேன் ஆசைப் படும்பிள்ளை
இப்பிள்ளை யார்சொல் எமக்கு.

அன்று வடமொழிக் கடலில் வியாசமாமுனியுரைத் தவமலகாதை
நன்று நிலவுலக தனிலெந் நாளுந்நிலைபெற்று நலத்தாலோங்கச்
சென்று பெரும்பொன் மலையில் மருப்பொடித் துவரைந்தருளும் பெரியதேவன்
இன்றுவளர் மருதடியிற் றமிழறிவோர கமலர்த்துமென் றூழானோன்.

### கோயிற் பூசகரும் தருமகர்த்தாக்களும்

விநாயகரடியராய் விளங்கும் மகாசைவ தவ விரதிகளாகிய அன்பர்களே! மேற்படி தியாகராசக் குருக்கள் இல்லறம் நடாத்தவெண்ணி ஆவரங்காலிற் சைவச்செட்டி வேளாண் குடும்பத்திலே ஓர் பெண்ணை விவாகஞ்செய்து குமரகுருபரர், வெற்றிவேலர் என்னும் இருவரைப் பெற்றனர். வெற்றிவேல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருடைய மகன் ஸ்ரீமான் ஐயாத்துரையவர்கள் இன்றைக்கும் மானிநகரில் வசிக்கின்றார். மேற்கூறப்பட்ட வெற்றிவேலருடைய பௌத்திரனே சிவபூசா ஒழுக்கங்களிற்றவறாத ஸ்ரீமான் செல்லையரவர்கள். ஆங்கிலேயர் கால முதயமானதும் சந்தான விர்த்தியுடையராய் விளங்கியவரும், விக்கினேசுரப் பெருமானின் தொண்டு பூண்டு குருத்துவம் புரிந்த புண்ணியோத்தமருமாகிய தியாகராசர் இம்மண்ணுலக வாழ்க்கையைவிட்டு விண்ணுலகில் விநாயகர் மூர்த்தியின் திருத்தாளெய்தினர். ஆலய பூசா கருமங்கள் அவரது சிரேஷ்ட புத்திரன் வெற்றிவேலையரால் நடைபெற்று வந்தன. கோயிற் காரியதரிசி சுவாமிநாத முதலியாரும் சிவபதமடைய, அவருடைய மகன் வலிகாமம் மேற்கு மணியகாரனாய் விளங்கிய குமாரசிங்கமணியமென்பவர் கோயில் மணியகாரனாயும் விளங்கினார். இவருக்குப் பின் இவரது புத்திரர்கள் ஸ்ரீமான் டாக்டர் சுவாமிநாதபிள்ளையவர்களும் இராசகாரிய உத்தியோகம் நடாத்திய ஸ்ரீமான் இராசகாரியரவர்களும் கோயிற்காரியங்கள் பார்த்து வந்தனர். பின் இவர்களின் பிள்ளைகள் சுகாதார பரிசோதகர் ஸ்ரீமான் நவரத்தினசிங்கமவர் களும் ஸ்ரீமான் இரத்தினசிங்கமவர்களும் தருமகர்த்தாக்களாய் விளங்கினர்.

ஸ்ரீமான் நவரத்தினசிங்கமவர்கள் ஆலயத்திற்கு அனேக நன்மைகளைச் செய்திருக்கின்றார். அவைகளிலொன்று, தெற்கு வீதியிலிருந்த அரசாட்சி யாருக்குரிய குளம் ஆலயத்திற்கு அதிகம் கிட்டியிருந்தமையால் இரதோற் சவத்திலன்று தேர் ஓடுவதற்கு வீதி அகலம் போதாதிருந்தது பற்றி, அப்போது வடமாகாண ஏசண்டராயிருந்த Sir வில்லியம் துவையினம் என்பவர் உதவியைக் கொண்டு குளத்திலொரு பாகத்தை மூடி ஒடுக்கமாயிருந்த வீதியை விசால மாக்கிவிட்டார். இக்காலத்திற் கோயிற் பூசை செய்து வந்தவர் வெற்றிவேல ருடைய மகன் ஸ்ரீமான் ஐயாத்துரையவர்கள். இவ்விதமே ஏறக்குறைய நூற் றைம்பது வருஷ காலம் பூசைசெய்துவந்த சைவக்குருமார் கோயிலைவிட்டு நீங்கிப் பிராமணருக்கு இடங்கொடுத்தனர். பிராமணருள்ளே முதற் பூசகரா யேற்பட்டவர் பிரம்மஸ்ரீ சீதாபதி ஐயரவர்கள். இங்கு ஏறக்குறைய ஐம்பது வருஷகாலமாய் விநாயகரது நித்திய நைமித்திகங்களை நடாத்தி வந்து மூன்று வருடங்களுக்கு முன் சிவலோகஞ் சேர்ந்தனர். இவருடைய குமாரர்களே இப்போது பூசகராய் விளங்குகின்றனர். கோயிற் காரியதரிசிகளாய் விளங்குகின்ற வர்கள் மேற்படி ஸ்ரீமான் நவரத்தினசிங்கமவர்களதும், ஸ்ரீமான் இரத்தின சிங்கமவர்களதும் பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரனே ஈசன் அருமைத் திருமகனே
தங்கு மருதடிவாழ் தற்பரனே - திங்களணி
செஞ்சடிலத் தானே திருமான் மருமகனே
நெஞ்சதனில் வாழ்ந்திருப்பாய் நீர்.

**விநாயகர் சீர்பரவல்**

சைவ சிரோன்மணிகளாகிய அன்பர்களே! மருதடியான் திருவடிகளைத் துதிக்கும் ஆசை. பூண்ட சிற்றறிவுடைய யாமும் புலவர்களுடைய செவிகளில், புல்லறியா வேடன் "மரா, மரா" என்று கத்திய சத்தங் கேட்டவாறதுபோல் இச்சரிதையைப் புகன்றிட்டோம். பெருமானுடைய மகத்துவங்களை எடுத்து பூரணமாயுரைக்கத்தக்க தபோபலனை யாம் பெற்றிலேம். ஆயினும் கல்வி யில்லாத யாம் கருணாநிதியாகிய விநாயகப் பெருமானுடைய திருவருளைப் பணிந்து வேண்டும்பொழுது பெருமான் எமது சிற்றறிவிற்குத் தோன்றிய விதத்தை இயன்றவரையில் கூறுவாம்.

## பிரார்த்தனை

விண்ணின்ற சோதி விரிகதிர் மண்டிலத்தின்
உண்ணின்ற தெய்வ உருவமே! - கண்ணின்
ஒளியே! ஒளிக்கொளியே! ஒள்மருதம் மேவும்
வெளியே! வெளிக்குமுன்னார் மெய்யர் - களிகூரும்
அண்ணலிறையே! நின்சீர் ஆர்எழிலின் தோற்றத்தை
எண்ணி உரைக்க இயைந்துநின்ற - மண்ணிலத்தோர்
எல்லையற்ற ஓர்பொருளுக் கெல்லையிடம் யாங்ஙனென்று
அல்லலுற்றார் என்னும் அறிஞருரை - மெல்லச்
செவியகத்துச் சேர்தலும்யான் சிந்தை நைந்தேன் எந்தாய்
கவியகத்துத் தேர்ந்த கலைஞர் - புவியகத்துப்
பைந்திருச்சேர் மேனிநல்லார் பாணிஉரைக் குங்காலம்
என்குருநீர் ஆரென் றியம்புவார் - அந்தரமரம்
தாக்கிறையே! நின்திருவைச் சாற்றுவதென் றாலடியேன்
ஆக்கும் அருளுடைய ஐங்கரனே! - நோக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குவமை தானென்பேன் தாதாய்! சிறியேன்
மனக்கமல பீடம் வதிந்து - நினைக்கரிய
பேரெழிலைக் காட்டுவையேற் பேணுமறி விற்கெட்டும்
சீர்சொலலென் நாவின் செயல்

வானகத்தும் மண்ணகத்தும் வயங்குசுடர் நீயாயின்
கானகத்தி லவதரித்தாய்! கருதுமெழில் நீயாயின்
நானகத்துக் கொண்டனநின் நளினமலர்ப் பதமாயின்
தேனகத்து மருதடியோ திருப்பீட மாவதுவே!
கோபாலன் திருமருகன் குட்டுவப்பா னீயாயின்

மாபார தம்வரையு மாமுனிவர்க் கிறையாயின்
நாவார வழுத்துவநின் நளினமலர்ப் பதமாயின்
பூவாரு மருதடியோ புதுப்பீட மாவதுவே!
பொன்னீர்நெல் அணிமணிசீர் புகழளிப்பா னீயாயின்
மின்னூரு மாமகுட மிலங்குதலை யுடையாயின்
நன்னீர உளத்தனநின் நளினமலர்ப் பதமாயின்
செந்நீர்மைப் பூதவமோ திருப்பீட மாவதுவே!

என ஆங்கு
மன்றலந்தா ரணிமார்பன் மதகரியின் முகத்தானை
ஆலமுண்ட இறைமகிழு மைங்கரனைப் பணிந்து நின்றேன்.
நின்ற எல்லையுள் நீடருள் சுரந்தெம்
மனக்கண் காண வலக்கண் துடிப்ப
உளமெனும் பீடத் துவந்து தோற்றினன்
வளர்பெரு வயிற்றோன் வயங்கொளிக் கரிமுகன்.
ஆங்கு
"நீடியவானோர் நெறியுடன்வாழ
அந்தணர்சிறக்க வானினம் பெருகச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தழல் வேள்விவே தாகமஞ்சிறக்க
அறம்பல பெருக மறம்பலசுருங்கத்
திறம்பலவரசர் செகதலம் விளங்க
வெங்கரிமுகமும் வியன்புழைக்கையோ
டைங்கரதலமு மலர்ப்பதமிரண்டும்
பவளத்தொளிசேர் பைந்துவர்வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப்பிரண்டுங்
கோடிசூரியர்போற் குலவிடுமேனியும்
பேழைபோலகன்ற பெருங்குடவயிறும்
நெற்றியினயனமு முப்புரிநூலுங்
கற்றைச் சடையுங் கனகநீண்முடியுந்
தங்கிய முறம்போற் றழைமடிச் செவியுமாய்
ஐங்கரத் தண்ணல் வந்தவதரித்தார்"
எனச் சிந்தித்துத் துதித்தேம்.

**மூலஸ்தானம்**

மேற்கூறிய இலட்சணங்களமைந்தவராய் மருதமரத்தின் கீழ் எழுந்தருளி யிருக்கும் விநாயகரது ஆலயம் உற்பத்தியாகாவிட்டால் இப்பொழுது அவரை வணங்குமனேகர் புறமதத்தைத் தழுவுவாராய் விடுவர். யாழ்ப்பாணத் திற் சைவசமயத்தை நிலைநிற்கச் செய்த ஆலயங்களிலொன்று இம்மருதடி யாலயமே. மூலஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையார் திருவுருவம் வடக்கில் நாட்டுக்கோட்டையென்னுமூரிலிருந்து அவ்வூர்ச் செட்டியார்களின் மூலமாய் வரவழைக்கப்பட்டு இற்றைக்கு ஏறக்குறைய நூற்றைம்பது வருடங்களுக்குமுன் அமர்த்திக் கும்பாபிஷேகஷகஞ் செய்யப்பட்டது. பூசை யாகும் வேளைகளிலே சனங்கள் கூடிக் கண்ணீர்சொரிந்து "அரகர" வென ஓலமிட்டுத் தலைகளிற் குட்டிச் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்காரஞ் செய்கின்றனர்.

"கணபதியே ரம்பன்மோ கன்றரணி தானே
கலாதரனே கசியபந் தன்விநா யகன்மா
கணபதிகிப் பிரப்பிரசா தனனாசா பூர
கன்வரதன் செயஎமுத மந்திரனே யிலக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதியே வாச்சிகதன் பீஜவிநா யகன்மங்
கலவிநா யகனுடுண்டி விநாயகனே பிரிய
கணபதியே சித்திவிநா யகன்வித்தா மணியே
காமர்மகோற் சடனென்ன"
மனத்தில் தியானஞ் செய்தும் வாயாலுரைத்தும் தொழுவர்.

# பொங்கல் வணக்கம்

நிலம்புகழுந் தமிழ்நாட்டிலறிஞரெலாங்கொண்டாடி நியமமா
தலம்புகழுமறையோதிப் பொருளாய்ந்து கனிகூருஞ்சைவராக
புலம்பரவு திருமானிப் பதியடியார் செம்மையு றும்புவியிற்பத்தி
நலம்பரவு பொங்கல்பலமோ தகந்தேன்வழுநீங்க நயப்பார்நேர்ந்து

மாசத்தார் தொழுதேத் தவரமளிக்கு மருதடி வாழ்வள்ளல் மானித்
தேசத்தார் நன்னகரிற் சிறந்தவளப் பிள்ளையான் திடரிலீசன்
நேசத்தாருமை புதல்வனே ரம்பனிருமலனைங் காத்தன்பூமி
வாசத்தார் மகிழ்ந்துபாற்பொங்கல் புரிந்தேத்துமிறைநாதன் மன்னோ

மருதடி விக்கினேசுரனாலயத்தில் ஒவ்வோர் நாளும் ஓர் விசேஷ தினமாயிருக்கின்றது. சனங்களாற் பொங்கல் செய்யப்படாதநாள் கிடையாது. இங்கே நடக்கும் நித்திய பொங்கல் கருமங்களைப்போல் இலங்கையில் வேறெந்தக் கோயிலிலுமில்லையெனலாம். இப்பொங்கல் வணக்கங்களைப் பற்றி அனேகம் வித்துவான்கள் புகழ்ந்து கவிகள் பாடியிருக்கின்றனர். அங்ஙனம் பாடிய கவிகள் எமது கைக்கு எட்டவில்லை. விநாயகரில் அன்பு பூண்டு எவராவது அவைகளை எமக்குக் கிடைக்கச் செய்யின் இரண்டாம் பதிப்பிற் சேர்த்து வெளிவிடுவோம்.

**மகோற்சவம்**

வருஷத்திலே பங்குனி மாதத்தில் மகோற்சவம் ஆரம்பமாகிப் பதினெட்டு நாட்களாய் விசேஷ திருவிழாக் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. அலங்காரமான திருவிழாக்கள் நடக்கிலும் ஆலய மகிமைகளைக் குறைக்கும் தாசியர் நடனம் முதலியன கோயிலில் நடப்பதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரதோற்சவம்**

ஏர்கொண்ட மானிநகர்க் கிறைவனாமேரம் பனெழிலார்சீதச்
சீர்கொண்ட மருதடியிற் செங்கழுநீர்ப் போதகமாம் புனிதனேறிக்
கார்கொண்டபிள்ளை யான்தடாகமார் காவலர்சூழ் செம்மைவீதிப்
பேர்கொண்ட திருவுலாத் தேரூரும் பெருமைசேர் கோலமன்னோ.

மருதடிப்பிள்ளையார் கோயில் இரதோற்சவம் எமது யாழ்ப்பாண நாட்டா ரெல்லார் மேலும் ஓர் கிளர்ச்சியை உண்டுபண்ணுந்தினமாயிருக்கின்றது. புதுவருடமாரம்பமாகும் நேரத்தில் விநாயகப் பெருமான் அதிஉன்னத விசித்திர அலங்காரமமைக்கப்பெற்ற இரதத்திலேறி வீதிவலம் வருகின்ற அற்புதக் காட்சியை எல்லோருங்கண்டு இன்புறுகின்றனர். மருதடியிரதத்தை வியந்து பேசாதவர் இல்லை. இவ்வமைப்புக்கொண்ட இரதம் திருவாலங்காட்டில் சிவானந்தத்தைப் பெற்று வாழும் பிரம்மஸ்ரீ சச்சிதானந்த ராஜயோகீஸ்வரர் சங்கர சுப்பையாசுவாமிகளவர்களால் நன்கு மதிக்கப்பெற்று அவரை இலங்கைக் குத் தரிசனங் கொடுக்கச் செய்தது யாவருமறிவர். சுவாமி தூக்கிய திருவடியின் கீழே சிவானந்தத்தை அனுபவித்துக்கொண்டு எக்காலமுமிருக்கின்ற "காரைக் காலம்மையார்" பேரானந்தத்தோடு,

"கொங்கை திரங்கிநரம்பெழுந் துகுண்டுகண்வெண் பற்குழி வயிற்றுப்
பங்கிசிவந் திருபற் கணீண்டு பாடுயர்நீள் கணைக்காலோர்பெண்பேய்
தங்கியலறியுலறுகாட்டிற்றாள் கடையெட்டுத் திசையும்வீசி
யங்கங்குளிர்ந்தன லாடுமெங்களப் பனிடந்திருவாலங்காடே"

என்று பாடித்துதிக்க அருள்செய்த இறைவனுடைய மனதையும் இந்த இரதம் கவரச்செய்தது போலும்! வருஷம் பிறந்த இரண்டாம் நாள் தீர்த்தோற்சவம் வெகுவிமரிசையாய் நடைபெறுகின்றது. இத்தினத்தில் அனேகர் காவடியெடுத்து வருங்காட்சி வியக்கத்தக்கது.

**சதுர்த்தி**

ஆவணி மாதத்திலே சதுர்த்தித்தினமானது பெருமானது திருச்சந் நிதானத்தைப் பார்ப்பவர் கண்களைப் பூரிக்கச் செய்கின்றது. இச்சதுர்த்தி,

"தேவர்கள் முனிவர் சித்தர்கந்தருவர்
யாவரும்வந்திவ னேவல் செய்திடுநாள்
அதிகமாயுரைக்கு மாவணித் திங்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிவளர்பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகற்குரிய விரதமென்றெண்ணி
மனாதிகள் களித்து மரபொடுநோற்றார்
இப்படி நோற்றிட் டெண்ணியபெறுநாள்
ஒப்பரும்விரதத் துறுமொரு சதுர்த்தியில்
நோற்றுநற்பூசை நுடங்காதாற்றிப்
போற்றிசெய்திட்டார் புலவரைங்கரனை
மருமலர்தூவும் வானவர்முன்னே
நிருமலன்குமர நிருத்தம்புரிந்தான்"

என்று பாடப்படும் மேன்மையுள்ளது. இச்சதுர்த்தியின் மேன்மைகளை யெடுத்துரைக்க எமது நாவும் நூலுங்கொள்ளாது.

"தேருநீராவணித் திங்களின் மதிவளர்
பூர்வீகபக்கம் புணர்ந்திடுசதுர்த்தியின்
முந்தும்புலரியின் முறைநீர்படிந்து
சந்திவந்தனந் தவறாதியற்றி
அத்தினமதனி லைங்கரக்கடவுளைப்
பத்தியோடர்ச்சனை பண்ணுதல் செய்வார்"

என்பதற்கிணங்க இத்தினத்தில் அன்பர்கள் பத்திசெய்யும் முறை யெவருமறிந்த விடயமே. இத்தினத்திலே திருவிழாக் கொண்டாட்டம் வெகுவிமரிசையாய் நடைபெறுகின்றது. கோயிலில் அன்னதானம் சொர்ணதானம் முதலிய தர்மங்கள் நடைபெறுகின்றன.

**விநாயகர் பிரபாவம்**

கார்த்திகை மாசத்தில் விநாயகர் விரதாரம்பமாகி இருபத்தொரு நாட்களாய்ப் "பிள்ளையார் கதை" வாசிக்கப்பட்டுக் கடைசி நாளிலே அடியார்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டி விரதம் பூண்டு மருதடி விநாயகரைத் தரிசித்து வேண்டிய வரங்களைப் பெற்றேகுகின்றனர். இந்த விரதமானது,

"கார்த்திகைக்கார்த்திகைக் கழித்தபின்னாளில்
ஆர்த்தகலிங்கத் தணியிழைவாங்கி
இருபத்தோரிழை இன்புறக்கட்டி
ஒருபோதுண்டி யுண்டொருமனமாய்
வேதத்தாதியும் பூமியிலெழுத்தும்
மூன்றெழுத்ததனான் மொழிந்தமந்திரமுந்
தேன்றருங்குழலியர் சிந்தையுட்செபித்தே
உரை தருபதினா றுபசாரத்தால்
வரைமகண் மதலையை வழிபாடாற்றி
இருபதுநாளு மிப்படிநோற்று
மற்றைநாளைங்கர மாமுகன்பிறந்த
தற்றைநாட்சதயமு மாறாம்பக்கமுஞ்
சேருமத்தினத்திற் றெளிபுனலாடி
வாரணமுகத்தோன் வதிபெருங்கோயில்
சீர்பெறமெழுகித் திருவிளக்கேற்றிக்
குலவுபொற்கலைகள் கொடுவிதானித்து
மலர்பலதொடுத்திடு மாலைகணாற்றிக்
கொலைபுரிவடிவேற் குகற்குமுன்வருகை
மலைமுகக்கடவுளை மஞ்சனமாட்டிப்
பொற்கலைநன் னூற் பூந்துகில்சார்த்திச்
சொற்பெறுசந்தனச் சுகந்தம்பூசிச்
செருந்திசண்பகஞ் செங்கழுநீரொடு
குருந்துமல்லிகை கோங்கொடுபிச்சி
கருமுகைபுன்னை கடிகமழ்பாதிரி
மருவிரிஞாழன் மகிழிருவாட்சி
தாமரைமுல்லை தழையவிழ்கொன்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமலர்நொச்சி பூத்தமைக்குவளை
காந்தளரத்தி கடம்புசெவ்வந்தி
வாய்ந்த நல்லெருக்கு மலர்க்காவீரம்
பச்சிலைநொச்சி படர்கொடியறுகு
முத்தளைக்கூவிள முதலியசார்த்தித்
தூபதீபங்கள் சுகம்பெறக்கொடுத்தே
அப்பமோதக மவலெள்ளுருண்டை
முப்பழந்தேங்காய் முதிர்மொழிக்கரும்பு
சீனிதேன்சர்க்கரை பருப்புடன்போனகங்
பானறுநெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக்கடவுள் களித்திடத்திருமுன்
பொற்புறப்படைத்துப் பூசனைபண்ணி"

அனுட்டிக்கவேண்டியதாயிருக்கின்றது. இவ்விரதத்தின் மகிமைகளை விரித்துரைக்க இயலாதிருந்தும் அனுபவமுறையைக் கொண்டு சனங்கள் சொல்லியவற்றை மாத்திரங் கூறுவோம். அதாவது, இந்த விரதநாட்களில் விடியற்காலையிலெழுந்து ஆசார நியதிநியமத்தோடு மருதடியிற் சென்று எவராவது பெருமானது உதயகாலப் பூஜையைக் காண்பாரேல், அவர் இம்மை மறுமைப் பயன்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோலடைவர். நீடித்த ஆயுள், தேகாரோக்கியம், ஐசுவரியம், சௌரியம், கீர்த்தி, தாட்சனியம், தயை, பொறுமை, நீதி, சபாபாண்டித்தியம், ஞானம் முதலானவைகள் பெறுவர். பகை, கலகம், துர்க்கருமம், கொலையாதி பாதகம், இடர், வறுமை, சகலரோகங்கள் யாவுந்தீர்ந்துபோகும்.

கருதடியார் பாவங் கடிந்தருளு மானி
மருதடிவாழ் ஐங்கரத்து வள்ளால் - பெரிதடியேன்
ஓதும் உனது சரிதத் துறுபிழையுந்
தீதுங் கடிந்தருளைச் செய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகவி

"பூவாழி மன்னர்மநு நீதி வாழி

புகலரிய மடமகளீர் நிறையும் வாழி

ஆவாழி அந்தணர்தங் கூட்டம் வாழி

அருமறைவே தாகமங்கள் புராணம் வாழி

ஓவாத தவங்கருணை விரதம் வாழி

உலகிலுள்ள சராசரங்க ளனைத்தும் வாழி

மாவாழும் பிள்ளையார் திடரில் வாழும்

மருதடியிற் கணபதிதாள் வாழிவாழி.."

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதடி விநாயகர் கும்மி

"ஏர்பூத்த மானி மருதடி மேவிய
ஏரம்பன் பாதம் மனத்திருத்திச்
சீர்பூத்த செந்தமிழ்க் கும்மி யுரைத்திடச்
செப்பு மவன்பதங் காப்பாமே.

ஆதியு மந்தமு மில்லாத நான்மறை
ஆதிப் பிரணவ நல்வடிவாய்
ஓதிய தொண்டர்கள் விக்கினம் நீக்கிட
ஒருரு வானாண்டி ஞானப் பெண்ணே.

உச்சியில் மாமகு டந்துலங்க வெள்ளை
ஒற்றை மருப்பு மணிவிளங்க
மெய்ச்செவிச் சாமரம் வீசப் பிரணவ
வேழமுகங் கொண்டு வந்தாண்டி.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
ஆகுமொர் மூவடி வானவனை
தொந்தி வயிற்றனை மானி மருதடித்
தோன்றலைப் பாடுவம் ஞானப்பெண்ணே

எந்தக் கருமங்கள் செய்யிறும் முன்னாக
எம்பெருமா னென்று போற்றாக்கால்
அந்தக் கருமஞ் சிவனுக்கு மாகாதா
மச்சு முறிந்தது காணுங்கடி.

பெற்ற தகப்பனும் முன்னே நினைக்கின்ற
பீடுடைப் பேழை வயிற்றோனை
ஒற்றை மருப்பனை மானி மருதடி
ஓங்கார ரூபனைப் பாடுங்கடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாளி னான்முக னிந்திரன் தேவர்
முகுந்தனோ டேனையர் தம்மையெலாம்
பன்னாள் வருத்து கயமுகனைக் கொன்ற
பண்ணவ னென்றென்று பாடுங்கடி.

சர்க்கரை மோதகந் தேங்கா யவல்கனி
சாற்றிய பாற்பொங்கற் புத்தமுதம்
இக்குட னெள்ளுருண்டை யிட்டுத் துதிக்க
இருவினை தீர்க்குவன் ஞானப்பெண்ணே.

தொட்டு வணங்க வருள்தரு மற்புதச்
சோதி மருத மரம்பாடிக்
குட்டை யுவந்தருளைங்கரன் பாதங்கள்
கும்பிட்டுக் கும்மியடியுங்கடி.

பூசைச் சிறப்பினைப் பாடுங்கடி நல்ல
பொங்கற் சிறப்பினைப் பாடுங்கடி
ஆசை யுடன்வன் றேரேறி யேவரும்
ஆனந்தங் கும்மி யடியுங்கடி.

அங்குச பாசந் தரித்தாண்டி யவன்
அம்பிகை பாலுங் குடித்தாண்டி
தங்கு விகட நடித்தாண்டிபெருஞ்
சந்திகள் தோறு மிருந்தாண்டி.

சேணும் நிலனு நிறைந்தரு வாய்நின்ற
செஞ்சடைச் சோதிய னெம்பெருமான்
காணும் படிசிறு சாணத்திற் புல்லினிற்
சார்வது செப்பி யடியுங்கடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த வினைகெடும் பேய்கள் விலகிடும்
மாறாத நோயெல்லாம் மாறிவிடும்
சிந்தை நினைந்தன சேரும் மருதடிச்
சித்தி விநாயகற் போற்றுங்கடி.


ஆசை யுடனடி யார்தரு மோதகம்
அப்பமு முப்பழ மானவெலாம்
ஓசையுட னுண்டு நல்லருள் செய்கின்ற
உத்தம னென்றடி யுன்னுங்கடி.

சைவ சமயிகளன்றியு மேனைச்
சமயிகளும்மனத் தில் நினைந்தால்
ஐயமொன் றின்றி யருள்செயு மெம்பிரான்
வரும் மருதடி யைங்கரனே.

வாழி மருதடி யைங்கரன் பாதங்கள்
வல்லபை வாழி யருள் வாழி
வாழி யடியவ ரந்தண ரென்றென்றும்
மானேசர் வர்க்கமும் வாழியரோ"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டட ஆலோசனை



க. சிறிஸ்கந்தராஜா
( பொறியியலாளர்
கோப்பாய் )

ஆலய கட்டட வரைகலைஞர்



கு. ச. குமாரதாஸ்
( கட்டட வரைகலைஞர்
நல்லூர் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை அலங்காரம்



க. சபாரத்தின ஐயர்
( இணுவில் )

கலச நிர்மாணம்



கலாபூசணம்
லெ. கெங்காதரன் ஆச்சாரியார்
( யாழ்ப்பாணம் )

பந்தல் அலங்காரம்



து. இராமச்சந்திரன்
( சந்திரன் பான்சி பலஸ்
ஆனைக்கோட்டை )

Digitized by Noolaham Foundation,
noolaham.org | aavanaham.org

# நூற்பயன்

## வெண்பா

சிந்தா குலந்தீருஞ் சித்திபுத்தி முத்தியெய்தும்
சந்தான மென்றுந் தழைத்தோங்கும் - கொந்தார்
மருதடியான் பாத மலரைத் தொழுது
தரிசித்துப் போற்றிறினைந் தால்

தீராத நோய்தீருஞ் செல்வமிகும் பக்திவரும்
வாராத கல்வியெல்லாம் வந்தெய்தும் - பேரார்
மருதடியா னைங்கரத்தான் மாமுகத்தான் பாதம்
கருதிக் கசிந்தேத்துங் கால்

**ஆசிரியர் ம.க.வே. பிள்ளைப்புலவர்**

**இயற்றிய சந்திரமௌலீசர் சதகம் என்னும்**

**ஈழமண்டல சதகத்திலிருக்கும்**

"மானிப்பாய் மருதடி விநாயகர்"
மருதடி விநாயகன் மானியம் பதிவாசி
மறைமுத லெழுத்து றுமிறை
மதகய முகற்செற்ற மூலவா தாரமுதன்
மாபார தம்பொறித்தெங்
கருதடிந் திடுகடவு ளவ்வைகயி லையினுறக்
கடிதுய்த்து விடுகணபதி
கருதினவர் கருதாத வர்க்குநன் மைகடீமை
காட்டும்விக் கினகருத்தர.
தருடருங் கருணைக்கட
லம்புயன் முதலோரு மறியாத தத்துவ
ளைப்பரிய வாந்தரங்கன்
சருநெடிது துய்த்தோர்புன் மாமாகி யிங்குளேன்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிப்பாய் இந்துக்கல்லூரித் தமிழ்மொழி வடமொழியாசிரியர்,

நீர்வேலிப் பண்டிதர் கோட்டம்,

ஸ்ரீமான் வ.சி. கந்தையபிள்ளையவர்கள் இயற்றிய

# மங்கல வாழ்த்து

## விருத்தம்

அத்தனருட் சித்திமரு தடியான் பாதத்
தண்புடையோ னாங்கிலஞ்செந் தமிழ்நூல் வல்லோன்
மெத்துசிவ பத்தியடி யார்கள் பத்தி
மேற்பட்டோன் மேலானோ ருறவு பூண்டோன்
வித்தகதா மோதாம்பிள் ளைப்பேர் மன்னன்
விளங்குதவ மதனில்வந்த வெற்றிப் பாலன்
உத்தமநல் லன்பர்குழா முவக்குஞ் செல்வன்
ஒளிகொள்சுவா மிநாதபிள்ளை யுறுபே ராசான்.
நினைத்தவரங் கொடுத்தருள மருத டிக்கண்
நின்றுருகு மடியாதமை யடிமைக் கொள்ளாத
தினைத்துணையு மகனாது செம்பொற் சோதித்
திருமேனி கொண்டவினா யகனார் மேலே
மனத்தெழுந்த பேரன்பாற் பத்தி மாலை
மான்மியத்தை யெழுதியச்சில் விளங்கச் செய்தான்
அனைத்துலகு மாக்குருமரு தடியான் காதை
அவனிதலத் தெஞ்ஞான்றும் வாழி வாழி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோபுர கதவு வேலைகள்




விஸ்வ பிரம்மஸ்ரீ
**த. சிறிதரன்**
( லக்ஷன் சிற்பக்கலைக்கூடம்
மோதரை, கொழும்பு 15 )

## கருங்கல் விநியோகம்



**க. கனகேஸ்வரன்**
( நாதன் சிற்பநிலையம், வவுனியா )

## உட்கோயில் கதவுகள்



**ச. சஞ்சீவன்**
( வட்டுக்கோட்டை )

## பித்தளை வேலைகள்



**பாப்பா வெல்டிங் வேக்ஸ்**
( யாழ்ப்பாணம் )

நிலம், சலவைக்கல் பதித்தல்

மாபிள்ஸ்
தொல்புரம்

மங்கள வாத்தியம்

சு. நடராஜா
குழுவினர்
சுதுமலை

இராஜ கோபுரங்கள், கருங்கல் வேலைகள்

தென்னிந்திய சிற்பக் கலைஞர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீமெந்து, கட்டட வேலைகள்
### - சுமன் (சூரி) குழுவினர் (மானிப்பாய் )

**ஆரம்பகால தலைமைத்துவம்**



அமரர் மு. பரமானந்தம்
( மணிமண்டபம் வீதி,
யாழ்ப்பாணம் )

**தலைமைத்துவம்**



ஜெ. சுமன் (சூரி)
( இணுவில் வீதி, மானிப்பாய் )

**உதவித் தலைமைத்துவம்**



அ. தர்மலிங்கம்
( வண்ணார்பண்ணை, தாமரைவீதி,
யாழ்ப்பாணம் )



ச. ரகுவரன்
( சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை )



அ. சரணிதரன்
( இணுவில் வீதி,
1ம் குறுக்குத்தெரு, மானிப்பாய் )



ர. திலீகரன்
( பொன்னாலை வீதி,
மானிப்பாய் )



ர. திலக்ஷன்
( பொன்னாலை வீதி,
மானிப்பாய் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவியாளர்கள்



ரா. இன்பராசா
( உடுவில் மேற்கு, சுன்னாகம்.)



இ. தியாகராஜா
( பிரான்பற்று
முருகன் கோவிலடி, பண்டத்தரிப்பு)



கோ. சிவகுமார்
( சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை )



க. சகிந்தன்
( ஆலடி, உடுவில்,
மானிப்பாய் )



த. கிருபாகரன்
( பிரான்பற்று, கலைமகள் வீதி,
பண்டத்தரிப்பு )



இ. தனுசன்
( பிரான்பற்று,
பண்டத்தரிப்பு )



க. பிரதீபன்
( அம்மன் கோவில் வீதி,
பண்டத்தரிப்பு )



சி. விதுஷன்
( முருகன் கோவில் வீதி,
பண்டத்தரிப்பு )



எம். செல்வரட்ணம்
( இணுவில் வீதி, மானிப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வ. நிசாந்தன்
( இணுவில் வீதி, மானிப்பாய் )



அ. அஜின்ரன்
( இணுவில் வீதி
1ம் குறுக்குத்தெரு, மானிப்பாய் )



சு. காண்டீபன்
( ஆனைக்கோட்டை வீதி,
மானிப்பாய்)



இ. ஜெயந்தன்
( பிரான்பற்று,
பண்டத்தரிப்பு)



பி. கிருஸ்ணரூபன்
( தொட்டிலடி )



சி. கஜன்ராஜ்
( கொக்குவில் மேற்கு,
பிடாரி கோவிலடி)



சு. தர்சன்
( ஏஷஊரி களபூமி,
காரைநகர்)



ஜெ. வினோதன்
( பிரான்பற்று
பண்டத்தரிப்பு )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூரை, சீலிங் வேலைகள்

– ஆசாரி மா. வைத்திலிங்கம் , ஆசாரி மா. பரமேஸ்வரன் (குழுவினர்)

## தலைமைத்துவம்



மா. வைத்திலிங்கம்
( நவாலி, மானிப்பாய் )



மா. பரமேஸ்வரன்
( நவாலி, மானிப்பாய் )

## உதவியாளர்கள்



சி. ஞானேஸ்வரன்
( கட்டுடை, மானிப்பாய் )



சி. மதனேஸ்வரன்
( கட்டுடை, மானிப்பாய் )



சி. விஜயரவிக்குமார்
( கட்டுடை, மானிப்பாய் )



வி. உதயகுமார்
( நவாலி, மானிப்பாய் )



க. ரவிச்சந்திரன்
( நவாலி, மானிப்பாய் )



இ. ஷம்ராஜ்
( நவாலி, மானிப்பாய் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



த. ரவீந்திரன்
( கட்டுடை, மானிப்பாய் )



மு. பிரபாகரன்
( நவாலி, மானிப்பாய் )



பொ. பிரதீப்
( நவாலி, மானிப்பாய் )



த. சுதாகரன்
( கட்டுடை, மானிப்பாய் )



ஊ. விஜயராசா
( கட்டுடை, மானிப்பாய் )



ப. ஜசிந்தன்
( நவாலி, மானிப்பாய் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்னிணைப்பு வேலைகள்

எஸ். ரி. பி எலெக்ரிக்கல்ஸ்

### தலைமைத்துவம்



த. பிரதீப்குமார் (சுரேஸ்)


*( மானிப்பாய்)*

### உதவியாளர்கள்



த. பிரதீபராஜ்

*( மானிப்பாய் )*



ரி. தேவராஜா

*( ஆனைக்கோட்டை)*



கு. புலேந்திரன்

*( நவாலி)*



ஆ. நித்தியகுமார்

*( நவாலி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்ண வேலைகள் (கோபுரம் , தூபிகள் ) - புலேந்திரன் குழுவினர்

### தலைமைத்துவம்



செ. புலேந்திரன்
( சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை )

### உதவித்தலைமைத்துவம்



செ. குகதாசன்
( சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை )

### உதவியாளர்கள்



ஆ. யசிந்தன்
( நாவலடி லேன்
வண்ணார்பண்ணை )



செ. உதயதேவன்
( சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை )



சிவராசா அருண்ராஜ்
( பிரான்பற்று
பண்டத்தரிப்பு )



ஜ. தயுரன்
( நவாலி தெற்கு
மானிப்பாய் )



ந. வினோ
( ஆனைக்கோட்டை )



பு. ராஜ்குமார்
( சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வர்ண வேலைகள் (உட் தூண்கள், சுவர்கள் ) - ராசன் குழுவினர்

தலைமைத்துவம்



எம் எவ் சேவியர்
( சுதுமலை தெற்கு, மானிப்பாய் )

உதவியாளர்



சோமு விஜயசேகரம் (ராஜா)
( சோதி வேம்படி வீதி, மானிப்பாய் )

## வர்ண வேலைகள் (உட் தூண்கள், சுவர்கள் ) - ஜெயராசா குழுவினர்

தலைமைத்துவம்



செ. ஜெயராசா
(ஐங்கரன் வீதி, சுதுமலை தெற்கு மானிப்பாய்)

உதவியாளர்கள்



க. வேணுகோபால்
( ஊரி களபூமி, காரைநகர் )



த. தர்சீலன்
( உடுவில் தெற்கு, புதுமடம் மானிப்பாய் )



து. நிஷாந்தன்
(ஐங்கரன் வீதி, சுதுமலை தெற்கு மானிப்பாய்)



அ. ஜெக்சன்
( இணுவில் வீதி, 1ம் குறுக்குத் தெரு, மானிப்பாய் )



பா. சர்வதன்
(உடுவில் வீதி, மானிப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ. கதீஸ்வரன்
( ஐங்கரன் வீதி, சுதுமலை தெற்கு
மானிப்பாய்)



இ. டிலக்சன்
( கொக்குவில் மேற்கு,
கொக்குவில் பிடாரி அம்மன் கோவிலடி )



த. அனுஜன்
( ஐங்கரன் வீதி, சுதுமலை தெற்கு
மானிப்பாய்)



ஆ. சயிலஜன் அலெக்ஸ்ரா
( ஐங்கரன் வீதி, சுதுமலை தெற்கு
மானிப்பாய்)



க. கவின்
( கொக்குவில் மேற்கு,
கொக்குவில் பிடாரி அம்மன் கோவிலடி )



இ. தினேஸ்
( கொக்குவில் மேற்கு,
கொக்குவில் வராகி அம்மன் கோவிலடி



சி. பிரகாஸ்
( ஐங்கரன் வீதி, சுதுமலை தெற்கு
மானிப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்பி வளைக்கும் வேலைகள்
## – சந்திரபாலா குழுவினர்

தலைமைத்துவம்



கி. சந்திரபாலா
( சுதுமலை )

உதவியாளர்கள்



க. ஆனந்தராஜா
( சுதுமலை )



ந. ராஜ்நிமல்
( உடுவில் )



ச. மகேஸ்வரன்
( கீரிமலை )



ச. ஜனர்த்தன்
( சுதுமலை )



க. சந்திரபாலா
( மானிப்பாய் )



சி. புவனேந்திரராஜா
( சுதுமலை )



ந. சண்முகராஜா
( சுதுமலை )



ந. ராஜகருணா
( சுதுமலை )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரும்பு வேலைகள்

### - அசோக் தொழிற்சாலை (சுன்னாகம்)

தலைமைத்துவம்



ந. கனகரத்தினம்

உதவித்தலைமைத்துவம்



ந. றமேஸ்வரன்

உதவியாளர்கள்



இ. ரகுலன்



செ. கமல்ராஜ்



அ. நிஷாந்தன்



க. மனோகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணாடி வேலைகள்



**எஸ். கணேசமூர்த்தி**

*( சரா என்ரபிறைஸ்*

நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம் )

உதவியாளர்

**பஞ்சாட்சரம் ராசன்**

(காளிகோவிலடி, மானிப்பாய்)

## உற்சவகால ஒலி, ஒளி அமைப்பு



**ராஜன் ஒலி, ஒளி அமைப்பாளர்கள்**

( கற்பொக்கணை, கந்தரோடை, சுன்னாகம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகத்தின்போது தர்மகர்த்தா சபையினர்



S.K. உதயசூரியர்
(தலைவர்)



ந. விவேகானந்தராஜா
(செயலாளர்)



சு. சிவகுமாரன்
(பொருளாளர்)



தி. மகேந்திரராஜா
(நிர்வாக உறுப்பினர்)



சி. சுரேஸ்குமார்
(நிர்வாக உறுப்பினர்)



க. கணேசமூர்த்தி
(நிர்வாக உறுப்பினர்)



செ. ஈஸ்வரன்
(நிர்வாக உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலஸ்தாபனத்தின்போது தர்மகர்த்தா சபையினர்



த. சிதம்பரநடராஜா
(தலைவர்)




S.K. உதயசூரியர்
(முகாமைத்துவ
தர்மகர்த்தா)



ச. குகபாஸ்கரன்
(செயலாளர்)



சு. சிவகுமாரன்
(பொருளாளர்)



பொ. ஈஸ்வரதாசன்
(உப பொருளாளர்)



(அமரர்) எஸ். மகேந்திரன்
(நிர்வாக உறுப்பினர்)



தி. மகேந்திரராஜா
(நிர்வாக உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகத்தின்போது வழிபடுவோர் சங்க நிர்வாகத்தினர்



**நிற்பவர்கள் இ.வ :-**

தெ. சாந்தராஜா, வி. கிரிதரன், வ. பாலமுரளி, ஆ. லோகாநந்தன், சோ. கிருபானந்தன், செ. ஜெயதாசன் (உபதலைவர்), சி. கஜமாமுகன் (உபபொருளாளர்), க. தனேந்திரன் (உப செயலாளர்), ம. மலர்வேந்தன், க. சிவதர்சன், ந. வைகுந்தன், சு. புஸ்பரங்கன் (உப செயலாளர்) செ. ஜனார்த்தனன், ஐ. ஞானேந்திரா,

**இருப்பவர்கள் இ.வ :-**

க. துரைசிங்கம், வி . ஜீவன்குமார், ஞா. பாலசுந்தரம், வே. சிவசுந்தரம், நா. பாலகிருஷ்ணன், து. செல்லையா (தலைவர்) த. தர்பாகரன் (செயலாளர்), ம. நிரூபன் (பொருளாளர்), க. வரதராசா (உபதலைவர்), க. திருநாவுக்கரசு, சி. முத்துலிங்கம், ஜெ. வீரசிங்கம்

**படப்பிடிப்பில் இல்லாதவர்கள் :-**

அ.மு.அருணாசலம், மா. தியாகராஜா. இ. வசந்தகுமார், த. விஜிகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்கு வாசல் இராஜகோபுரம், மருதமரத்தடிப் பிள்ளையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உட்கோவில் கருங்கல் சிற்பங்கள்






ஆலயத்தின் உட்புறத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுப்பிரகார கோவில்கள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமருத்தடி விநாயகர்



சுற்றுப்பிரகார கோவில்கள்





வசந்தமண்டபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தில் நடைபெற்ற திருப்பணியில் ஒரு பகுதியினை தாங்களாகவே முன்வந்து அதற்குரிய முழுச்செலவினையும் நல்கிய அடியவர்களின்

# பெயரும் திருப்பணி விபரமும்

01. சிவன் ஆலயம் - கனகராஜா மோகன்
இணுவில் வீதி, மானிப்பாய். (சுவிஸ்)

02. அம்மன் ஆலயம் - கைலாயபிள்ளை சுந்தரலிங்கம் குடும்பத்தினர்
யாழ் வீதி, மானிப்பாய். (லண்டன்)

03. முருகன் ஆலயம் - A.யோகராஜா
உடுவில் வீதி, மானிப்பாய். (லண்டன்)

04. நடேசர் ஆலயம் - திருநீலகண்டன் சுமதி குடும்பத்தினர்
யாழ் வீதி, மானிப்பாய். (லண்டன்)

05. நவக்கிரக ஆலயம் - E.S.P. நாகரத்தினம்
கஜமுகன் ஹாட்வெயார்

06. லக்சுமி நாராயணர் - கிரிதரன் றோகினி குடும்பத்தினர்
விமாகி ஸ்தாபனம்

07. நால்வர் ஆலயம் - பீதாம்பரம் குடும்பம்
டச் றோட், மானிப்பாய்.

08. வைரவர் ஆலயம் - சின்னத்தம்பி பத்மநாதன்
சின்னத்தம்பி அவனியூ, மானிப்பாய்.

09. சண்டேஸ்வரர் ஆலயம் - சின்னத்துரை நகுலேஸ்வரன்
முத்துத்தம்பி லேன், மானிப்பாய் (லண்டன்)

10. வசந்த மண்டபம் - சிவகுமாரன் கமலாதேவி குடும்பத்தினர்
சுந்தர்சன் மானிப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. இராஜகோபுர கதவுகள் - சுப்பிரமணியம் அரியகுட்டி குடும்பத்தினர்

12. யாகசாலை - சக்தியானந்தன் சுதன்
கைலாயபிள்ளையார் கோயிலடி, நல்லூர். (கனடா)

13. வடக்கு இராஜகோபுரம் - க.கணன்
பொன்னையா வீதி, கட்டுடை, மானிப்பாய்.

14. தெற்கு இராஜகோபுரம் - அவுஸ்திரேலியா வாழ் மருதடியான் அடியவர்கள்

15. மணிக்கூட்டு கோபுரம் - பொன்னம்பலம் அரியகுட்டி
ஹல்லக் லேன், மானிப்பாய்.

16. துவாரகணபதி - விபூதினி சிவயோகன்
கந்தர்மடம்.

17. மருதமர பிள்ளையார் அலங்காரம் - துரைசிங்கம் ரவிராஜ்
ஹல்லக் லேன், மானிப்பாய்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Gnanam Paint

All Paint Color Mixing Show Rooms






வெளியீட்டு அனுசரணை :

## ஞானம் பெயின்ட்

NO.558, 560, MANIPAY ROAD, ODDUMADAM, JAFFNA.

Tel : 021 2225577 Mob : 076 6583535, 077 6184691 Email : gnanampaint@yahoo.co.uk

Dulux let's colour | NIPPON PAINT | Rock | mipo | CAUSEWAY | Appoloy | Multilac PREMIUM PAINTS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org